ரிஜிஸ்டர் நெ. 2041.

தனிப்பிரதி விலை ஒரு அணா.

குடி அரசு

வருட சந்தா முன் பணம் — ரூ. 3—0
6-மாத சந்தா ,, — ,, 1—12
வேளி நாட்டிற்கு ,, — ,, 5—0

ஞாயிறுதோறும் வெளிவரும்.

வியாபாரிகள் விளம்பரம் அங் 1 க்கு ரூ. 1.
கோர்ட் விளம்பரம் அங்குலம் 1 க்கு ரூ. 2.
நீடித்த விளம்பரத்துக்கு தனி விகிதம்

மாலை 7 | ஈரோடு, ஆங்கிரஸ-வரு சித்திரை-மீ 12-உ (24—4—1932) | மலர் 52

பலமுள்ளவீரபுருடனுக

குமரனுக, வாலிபத்தன்மையடைய, ஆண் பெண் மன மோத்துவாழ, இல்லற இன்பம் அனுபவிக்க, பத்திர பாக்கியம் பெற வழியில்லையென வருந்துபவர்கள்

தங்கபஸ்பம்.

சாப்பிடுங்கள்.

அபாரதாது புஷ்டியும், பலமும், பசியும், ரத்தவிர்த்தியும் உண்டாகும் இல்வாழ்வில் அதியற்புத சுகந்தரும்.

48-நாள் பஸ்பம் விலை ரூ. 20. 24-நாளுக்கு ரூ. 10.

அந்நிய தேசவாசிகள் மருந்திற்கு ஆர்டர் செய்யும்போது முன்பணம் ரூ. 5 அனுப்பவேண்டும்.

வைத்திய ஆசிரியர் C. மலையப்பசாமி, நித்தியானந்த மெடிக்கல் ஹால், பழனி S. I

மாதர்களுக்கு

இதுதான்வேண்டியது

கெர்ப்ப எண்ணெய்



மாதாந்தர காலத்தில் உண்டாகும் வயிற்றுவலியை உடனே நிறுத்தும். சரியாய் பஹிஷ்டையாகும். கெர்ப்பாசயம் சினேப்பை இவற்றிலுள்ள சகல கெடுதல்களும் நீங்கி கெர்ப்பம் உண்டாகும் மிக்க அநுபவமான்து.

புட்டி 1-க்கு ரூ. 2.

டாக்டர் சிங்காரம் அவர்களின்

மிகவும் குணமுள்ள மருந்துகள்.

உலகப்பிரசித்திபெற்ற

மஹா சந்தனுதித் தைலம்.

அநேக பச்சிலை மூலிகைகள் சேர்ந்தது. கண் பார்வை குறைவாயிருந்த அனேகருக்கு இந்தத் தைலத்தின் உபயோகத்தினால் நல்ல பார்வை ஏற்பட்டிருக்கிறது.

கை, கால், கண் எரிச்சல், கண் சிகப்பு, கண்ணில் நீர்வடிதல், கண் பூ, பீளை சாருதல், மேக நீர், வெள்ளைமூத்ரு, நித்திரையின்மை, ஒருத்தலை நோய், பீனிசம், காதிரைச்சல், காதுமந்தம், மண்டைக்குத்து முதலிய சிரசிலுண்டாகும் பல நோய்களைக் குணம்செய்யும். வெட்டைசூடு, திரேககாங்கை முதலிய எல்லாவித உஷ்ணத்தையும் போக்கி சரீரத்திற்கு குளிர்ச்சியையும் நல்ல சுகத்தையும் கொடுக்கும். 24 அவுன்ஸ் டின் ரூ. 4 12 அவுன்ஸ் டின் ரூ. 2—2—0

சாலாமிசிரி லேகியம்.

சிறந்த தாதுபுஷ்டி மருந்து.

கை கால் அசதி, சோம்பல், இடுப்புவலி, நரம்பு தளர்ச்சி, சொப்பன ஸ்கலிதம், சம்போக காலத்தில் ஏற்படும் துரிதஸ்கலிதம் முதலியு கொடிய வியாதிகளை நீக்கி தளர்ந்த நரம்புகளை கெட்டிப்படுத்தி வீரிய விர்த்தியை உண்டாக்கும். மனதுக்கு உற்சாகத்தையும் சுறுசுறுப்பையும் உண்டாக்கும். சம்போக இன்பத்தை முற்றிலும் அநுபவிக்கச் செய்யும். சாப்பிட மதுரமுள்ளது.

ஒரு சேர் டப்பி விலை ரூ. 2—8—0

மகா வில்வாதி லேகியம்.

அஜீரணம், வயிற்றுப்பிசம், பசிமந்தம், நெஞ்சில் கரகரப்பு, குலை எரிவு, வாயில் ஜலம் ஊரல், நெஞ்சொரிவு, வாந்தி, தலைசுற்றல் வயிற்றுவலி, அஜீரணத்தால் ஏற்படும் வயிற்றுப்போக்குகள் நாவறோசிகம், மயக்கம், கை, கால் குடைச்சல், முதலிய பித்தம், பித்த வாய்வு சம்பந்தமான பலவித வியாதிகளை நிவர்த்தி செய்து நல்ல பசிதீபனத்தையும், ஜீர்ண சக்தியையும் உண்டாக்கும். பத்தியமில்லை.

ஒரு சேர் டப்பி விலை ரூ. 2.

அமிர்த சஞ்சீவி லேகியம்.

மனிதருக்குண்டாகும் நோய்களுக்குப் பலகாரணங்கள் இருந்தாலும் மலசிக்கல் ஓர் முக்கிய காரணமாயிருக்கிறது. ஆதலால் மலசிக்கலை உடனே நிவர்த்திக்கவேண்டும். இந்த லேகியம் எவ்வித மலசிக்கலையும் நீக்கி, தாராளமாய் காலை, மாலை மலம் வெளியாகும்படி செய்வதுடன், வாய்வு, தொந்தரவுகளையும் போக்கும்.

பலவித பழச் சத்துக்களும், சிறந்த மூலிகைகளும் சேர்த்து தயார் செய்யப்பட்டது. சாப்பிட மதுரமுள்ளது. பாலர் விருத்தாப்பியர் யாவரும் சாப்பிடலாம்.

ஒரு சேர் டப்பி விலை ரூ. 2.

எல்லா மருந்துகளுக்கும் பாக்கிங் தபால் செலவு பிரத்தியேகம். மலாய் நாட்டு வாசிகள் ஆர்டருடன் முன்பணம் அனுப்பவேண்டும்

விலாசம் தெரிவித்தால் முழு விவரமடங்கிய கேட்லாக் இலவசமாய் அனுப்பப்படும்.

கமிஷன் ஏஜண்டுகள் தேவை.

டி. சி. சிங்காரம் அண்டு கோ.,
தெப்பக்குளம் போஸ்டு, திருச்சிராப்பள்ளி.

ஆனந்தரின்

இந்திய பற்பசை (டூத்பேஸ்ட்)

பற்களைப்பளிங்கு போலாக்கும். எல்லா ஷாப்புகளிலும் கிடைக்கும்.



தமிழ் வைத்தியசாலை,
221, தங்கசாலை வீதி,
சென்னை.

புதுவைமுரசு

ஆசிரியர்:-
அ. பொன்னம்
பலனர்,
அவர்கள்.

24 பக்கங்களோடு அழகிய முறையில் திங்கட்கிழமைதோறும் வெளிவரும் சுயமரியாதைச் செந்தமிழ் வாரப் பத்திரிகை. வருட சந்தா ரூ. 3. வெளிநாடு ரூ. 5.
மாதிரிபிரதி இலவம்! மானேஜர்,
"புதுவை முரசு"
புதுச்சேரி (F. இந்தியா)

"சாமிகளின் அடிமை"

"இந்திய மாதா" என்னும் நூலை இயற்றிய மிஸ். மேயோவால் எழுதப்பட்ட ஆங்கில நூலின் மொழிபெயர்ப்பு. இதில் ஹிந்துக்கள் என்போரின் கடவுள், மதம் என்பவற்றின்பேரால் அநுஷ்டித்துவரும் கொடிய, அநாசாரபழக்வழக்கங்களைக்கண்டுணரலாம், இனிய தமிழ், எளியநடை, ருசிகர கதைகள்.

அசல் விலை ரூ. 1—8—0.

இப்போதைய விலை ரூ. 0—12—0.

கிடைக்குமிடம்:—

குடி அரசு புத்தகசாலை, ஈரோடு.

சோமதேவ இருஷியின் வரப்பிரசாத ஔஷதம்.

குஷ்டம்

தீராதகர்மரோகியென்றெண்ணி கஷ்டப்படுவதேன்?

எக்காரணத்தினாலுமுண்டாகின்ற எவ்வித குஷ்ட நோய்க்கும் அனேக தொத்துவியாதிகளுக்கும சீரான சிகிச்சை முறைகளையும் சிறந்த ஔஷதங்களையும் சாத மீகத்தோதுக்கிணங்கி அனுபவித்தானந்தப்படுங்கள்.
நோயினால் அவஸ்தைப்படுவோர் ஸ்டாம்புடன் எழுதுங்கள்

ஸ்ரீ. ஓ. கேசவவைத்தியர்

Bhaskara Vilasam (S. K. R.) Pharmacy
Cameron Road, Pallithottam, Quilon S I.

Read.

The 'Citizen'

and become a
True Citizen.

The only Monthly Magazine in India purely devoted to the civic, Social and economic Interests of the Indians. Annual Subscription Rs. 2—0—0.

For advertisement please apply to:—

The Publisher
The Citizen
86, East Andar Street,
Teppakulam, Trichy.

சத்தியாக்கிரகமா? சண்டித்தனமா?

மேற் கண்ட 6—9—31 ந் தேதி "குடி அரசு"ல் வெளியான "சத்தியாக்கிரகமா சண்டித்தனமா" என்ற தலையங்கத்தை புத்தக ரூபமாக வெளியிட்டிருக்கிறோம். இதை விநியோகிக்க விரும்பமுள்ள சுயமரியாதை அன்பர்கள் முன் பணமனுப்பிப் பெற்றுக்கொள்ள வேண்டுகிறோம். 100 புஸ்தகம் விலை ரூ. 0—12—0.

1 ரூ. ஸ்டாம்பு அனுப்பினால் 100 புஸ்தகம் டூ போஸ்டில் அனுப்பப்படும்.

மானேஜர்,
குடி அரசு, ஈரோடு.

சுயமரியாதை இயக்கப் பத்திரிகைகள்.

'தமிழன்'

வாரப்பத்திப்பு

உள்நாடு வருடசந்தா 3—0—0
வெளிநாடு ,, 4—0—0
ஆசிரியர்: ஜி, அப்பாதுரையார்,
விலாசம்:—
மானேஜர் "தமிழன்"
ஆண்டர்சன் பேட்டை P. O.
கோலார் தங்கவயல் (S. I.)

முன்னேற்றம்.

வாரப்பதிப்பு.
சிங்கப்பூரிலிருந்து வெளிவருவது
உள்நாடு சந்தா $. 5—0—0
இந்தியாவுக்கு ரூ. 8—0—0
ஆசிரியர்:- கோ. சாரங்கபாணி.
விலாசம்:—
மானேஜர்: "முன்னேற்றம்"
152 சிலிகிரோட், சிங்கப்பூர்.

"போர் முரசு"

வாரப்பதிப்பு.
ஆசிரியர் ச. ம. சி- பரமசிவம்
தனிப்பிரதி காலணு.
வருட சந்தா ரூ. 1—8—0.
"போர் முரசு"
19, பெரிய செட்டி தெரு,
உறையூர்—திருச்சி.

சென்னை லோக்கல் போர்டு ஆக்டு.

(1330 வரையிலுமுள்ள சீர்திருத்தங்களுடன்கூடியது)
M, S. பார்த்தசாரதி அய்யங்கார், B. A., B. L,
அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டது.
விலை ரூபா 2—0—0. வி பி செலவு ரூ. 0—5—0.
மானேஜர்,
குடி அரசு புத்தகசாலை, ஈரோடு.

தாது புஷ்டிக்கு "கெய்ரோடைன்"

சாப்பிடுங்கள்.

இந்தியா கவர்ண்மெண்டில் ரிஜிஸ்தர் செய்தது. நபும்சகர்களுக்கும் அளவு மீறிய தாதுபுஷ்டி தரும். உண்மையான நற்சாட்சிகளடங்கிய பெரிய புத்தகம் இலவமாக அனுப்புகிறோம். விலாசம்:
ஆர். எஸ். பதி அன்கோ (ரிஜிஸ்டர்டு) மதுரை.

Man and the Universe.

மனிதனும்-பிரபஞ்சமும்.

மனிதன் யார்?

[தோழர் M. சிங்காரவேலு B. A., B. L.,]

(I)

நாம் யார்? என்ற கேள்விக்குக் காடுக்கும் விடையை நோக்க, விடைகொடுப்போருடைய ஞானமும், அறிவும் விளங்கும். "நான் யார் என்னுள்ளமெது" என்று வேதாந்தி கேட்டு நானும் என் வுள்ளமும் பிரம்மம் என்று விடை பகர்கிறான், ஆனால் "பிர்மம்" என்பது யாதெனில், அது மனவாக்குக் காயத்திற்கு எட்டாதது என்கின்றான். மன வாக்கு காயத்திற்கு எட்டாத ஒன்று, மனவாக்கு காயத்திற்கு எட்டும் பொருளாகுமா வென்பதை, வேதாந்தி யோசித்தானில்லை. இதனாலேயே இவனது புத்தி உலக்கைக் கொழுந்தென பாணிக்கலாம் போலும்? எதார்த்தத்தில் எந்த மதஸ்தனும் எந்த தத்துவஞானியும், மனிதனை யாரென்று விசாரித்தார்களில்லை. "வாயில் வந்தபடி எல்லாம் மனம் போனபடி எல்லாம்" மனிதனைப் பதி என்றும், தேவ குமாரனென்றும் இன்னும் பல விதமாகக் கருதுகின்றார்கள், மெஞ்ஞானிகளைத் தவிர மற்ற யாரும் மனிதனை சீவர்களில் யாரென்று விசாரித்தார்கள் இல்லை.

வேதகால முதல் அதாவது சுமார் 5000 வருஷங்களாக, மனிதனை இன்னவனென்று தெரிந்து உரைத்தார் ஒருவருமிலர். சென்ற 100 வருஷங்களாகத்தான், விஞ்ஞானிகள் மனிதனுடைய எதார்த்த வடிவத்தை விசாரிக்கத் தொடங்கினர். இவ்விசாரணையின் பயனாக மனிதன் யாரென்ற கேள்விக்கு, புத்திக்கும், யுக்திக்கும் பொருத்தமாக விடை அளிக்க சக்தி பெற்றார்கள். பூமி இன்னதென்றும், பூமியிலுள்ள அசேதனம், அதாவது உயிரில்லாப் பொருள் இன்னவை என்றும் தெரிந்து வந்த போதிலும், மனிதன் இன்னவனென்று அறிய முடியாமல் இருந்து வந்தது. 1859 வருஷத்தில், ஓர் அரிய கிரந்தம் வெளிவந்தது. அதன் ஆசிரியர் சார்லஸ் டார்வின் என்ற (Charles Darwin) மெஞ்ஞானி. மனிதனையும், அவனுக்கு ஈறாகவுள்ள கோடானகோடி சீவர்களையும் 29 வருஷ காலமாக விசாரிக்கத் தொடங்கி, கடைசியில் அதே விசாரணையில் ஏற்பட்ட தீர்மானத்தை, 1859ம் வருடம் "சீவராசி உற்பவம்" என்ற நூலை வெளியிட்டார்.

அந்த நூலில் ஞாயங்கள் வெளிவந்ததும், மெஞ்ஞானிகளில் பலர் அந்நியாயங்களை ஏற்றுக் கொண்டனர். ஆனால், மதஸ்தர்கள் மனக்கலக்க முற்றனர். இதுகாறும் பொது மக்களின் மூடத்தனத்தில், சீவனம் செய்து கொண்டு வந்ததை இழக்க நேரிடுமோ வென, அச்சமுற்றனர். அந்த ஞாயங்கள் அங்கீகரிக்கப்பட்டது முதல் உலகிலுள்ளமெஞ் ஞானிகள் யாவரும் அந்த ஞாயங்களை ஏற்றுக் கொண்டு பிரகிருத அனுபவங்களுக் கெல்லாம் அந்த ஞாயங்களைப் பிரயோகப் படுத்தி னர்கள். அதுதான் பிரபல சித்தாந்தமாகிய, எவலூஷன், (Evolution) அதாவது ஒன்றி லிருந்து ஒன்று பெறப்பட்ட சித்தாந்தமாகும். அதை வடமொழி யில் பரிணமம், அல்லது பரிணமித்தல், எனவும் வழங்குவார்கள். இந்த பரிணம சித்தாந்தப்படி மனிதன் யாவன்? என்ற கேள்விக்கு விடை அளிக்க முயல்வாம்.

மனிதன் சீவர்களில் ஒருவனென்பது, மதஸ்தர்களுக்கும் சம்மதமான விஷயமாகும். சீவர்களென்றால் யார்? புல், பூண்டு, கிருமி, புழு, நடப்பன, பறப்பன வைகளாகிய உருவங்கள் யாவும் சீவர்களெனப்படும். இந்த சீவர்களில் இரு வகுப்புண்டு. ஒரு வகுப்பு புல், பூண்டு, செடி, மரங்களாகும். மற்றோர் வகை, புழு, பூச்சி, பறப்பன, நடப்பனவைகளாகும். புல், பூண்டு, முதலிய வைகளைத் தாவரத்தில் வகுப்பார்கள். புழு, பூச்சி ஈறாகவுள்ளமனிதனை பிராணிகளில் வகுப்பார்கள்.

சீவர்.

தாவரம், (புல், பூண்டு)	பிராணி (புழு, பூச்சி)

மனிதன் புழு பூச்சி முதலிய பிராணிகளின் முக்கிய குணங்களை வகித்துள்ளவன் எனக்கண்டு பிடிக்கப்பட்டிருக்கின்றது. பிராணி தனை அசையவும், கலப்புற்ற (Compound) வஸ்துக்களை உண்ணவும், காற்றிலுள்ள கரிவாயுவை வெளிப்படுத்துதலாலும், தனை அசையாத காற்றைத் தின்னும் தாவரவகைகளிலிருந்து பிரக்கப் பட்டன. மனிதன் மற்ற பிராணிகளுக்குள்ள குணங்களை பொதுவாகப் பொருந்தி இருக்கின்றமையால், சீவனும் பிராணி வகையில் சேர்க்கப்பட்டான், ஆதலின் மனிதன் பிராணிவகையில் ஒருவனன். .

பிராணிகள், பல வகைத்து. புழுக்களென்னும், மீன்களென்னும், பல்லி, ஓணான் என்னும், பறவை எனவும், நாற்கால் சீவனெனவும் பிரிக்கப்பட்டுள்ளன. இவைகளில், மனிதன் எந்த கூட்டத்தில் சேர்ந்தவன்? புழுப் பூச்சி, பல்லி, பறவை வர்க்கங்களில் நேரிடச் சேர்ந்தவனல்லன். நாற்கால் மிருகங்களில் ஒருவன் என்பதற்குச் சந்தேகமில்லை, இவனுக்கு, அவைகளுக்கு இருப்பதுபோலவே, கைகால் நாலும் இருக்கின்றன. ஆனால், இவன், நாலு கால்களால் நடக்காமல், இரண்டு கால்களால் நடக்கின்றான் இருந்தாலும், குழந்தைப் பருவத்தில் இவனும் "நாலு காலால்" தவழ்கின்றானதலால் ஒரு காலத்திலாவது இவனும், நான்கு கால்களால் நடக்கவோ, தவழவோ வேண்டி இருக்கிறது,

நாற்கால் சீவர்களை, பால்கொடுக்கும் சீவர்களென்றழைப்பதுண்டு. மனிதனும் பால்கொடுக்கும் லட்சணத்தால், நாற்கால் ஜீவனில் ஒருவனென்று சொல்வதும் பொருந்தும்.

இதற்கு, நாற்கால் ஜீவர்கள் யாவர்? ஆடுமாடு, குதிரை, கழுதை, சிங்கம், புலி, நாய், பூனை, யானை, ஒட்டை, காண்டாமிருகம், பன்றி, தேவாங்கு, குரங்கு முதலியன. இவைகளில் மனிதன் குரங்கின் உருவத்தை ஏறக்குறைய பெற்றுவந்தவன். சில நூல் அறிஞர்கள், மனிதனைக் குரங்கு வகைகளில் வொன்றாகப் பலவித காரணங்களால் சேர்த்துள்ளார். அந்தக் காரணங்களை விரிவாகப் பின்னர் கூறலாம்.

குரங்குகள் இரண்டு வகைத்து அதாவது வாலுடைய குரங்குகளென்றும், வாலில்லாக் குரங்குகளென்றும் வழங்கும். மனிதனுக்கு வாலில்லாமையால், இவனை வாலில்லாக் குரங்குவகையில் சேர்ந்தவனென்றே சொல்லலாம்.

குரங்கு.

வாலில்லாக் குரங்கு	வாலுடைய குரங்கு

குரங்குகள் தற்போது நான்கு வகைதான் ஜீவித்து வருகின்றன. அவையாவன, ஓராங் (Orang) என்ற காட்டு மனிதன், கொரில்லா (Gorilla) என்றவோர் உருவம். சிம்பான்சி [Chimbanzei] என்றவோர் உருவம், ஹைலபேடிஸ் [Hylobates] என்ற ஒரு சிறிய வாலில்லாக் குரங்கு. இவைகளைச் சென்னை மியூசியத்தில், [Museum] அதாவது செத்த உருவக் காட்சி சாலையில் பார்க்கலாம். இந்த நான்கில், மனிதன், ஓராங்கிற்கும், சிம்பான்சிக்கும் நெருங்கியவனாய்த் தோன்றுகின்றான்.

வாலில்லாக் குரங்கு

1. ஓராங் — மனிதன்
2. சிம்பான்சி
3. கொரில்லா
5. ஹைலோபேடிஸ்

மனிதனும், வாலில்லாக் குரங்குகள் வேறுபட்டிருப்பதுபோல், விந்தியாசப்பட்டுள்ளான்.

மனிதன்

வெள்ளையர்	1. பர்மியர் கருப்பர்
	2. சீனர்
	3. மங்கோலியர்
	4. ஜப்பானியர்
	5. ஆஸ்டிரேலியர்

இவர்களை மூன்று வகையாகப் பிரித்துள்ளார். வெள்ளையரை, காகேஷிய னெனவும் [Caucasions] சீனபர்மியரை மங்கோலியர் [Mongols] என்றும், கருப்பு மனிதரை நீக்ரோஸ் [Negros] என்றும் வழங்குவார்கள். ஆஸ்டிரேலியாவில் ஓர்வித மனிதர்கள் வாழ்ந்து வந்தார்கள். அவர்களையும் சேர்த்தால், மனிதராகி, 5 விதமாக பூர்வகாலந் தொடங்கி பிரிக்கப்பட்டுவந்து இருக்கின்றார்களெனச் சொல்லலாம்.

இந்த இயற்கை வகைபாகத்தரம் பிரித்துப் பார்க்கையில், நாம் யார்? என்ற கேள்விக்குத் விஞ்ஞானவிடை என்னவெனில், வாலில்லாக் குரங்குகளில் நீர் ஒருவர், என்றே விடையளிக்கப்படும், இதுதான் இயற்கை விடை. தற்கால

தொடர்ச்சி 18-ம் பக்கம் பார்க்க.

பகுத்தறிவு நூற்பதிப்புக்கழகம்.

(தோழர் அ. இராகவன்)

நமது நாட்டு மக்கள் கொண்ட பழய பழக்க வழக்கங்களையும், மூடநம்பிக்கைகளையும் ஒழித்தும், யாண்டும் பகுத்தறிவு ஜோதி பிரகாசிக்க விடாது தடை செய்யும் புராணங்களையும், அதை மிகை படுத்தி எழுதியிருக்கும் உரை நூற்களையும் ஆதரித்தும், எழுதிய பாடப்புத்தகங்களையும் ஒழித்து, அறிவியல் நூற்களைத் தோற்றச் செய்ய இது வரை யாதொரு முயற்சியும் நம் நாட்டில் நடைபெற வில்லை, சிற்சில பத்திரிகைக ளிருந்தாலும் அவைகளெல்லாம் ஒரு தனிப்பட்ட நபரின் அதிகாரத்திலே யிருப்பதால் அந்நபர்களின் காலத்திற்குப் பின் அப்பத்திரிகைகளில் ஒன்றுவைஷ்ணவப் பிரசாரமும், மற்றொன்று சைவப் பிரசாரமும் பிறிதொன்று கிறிஸ்து மதப்பிரசாரமும் வேறொன்றுபௌத்த மதப் பிரசாரமும் செய்ய நேரிட்டாலும் நேரிடலாம். என்வே பகுத்தறிவு இயக்க மக்கள் பலரையும் பங்காளிகளாகச் கொண்ட இத்தகைய கழகம் ஒன்று நிறுவ முன் வந்தேன். ஆகையால் பகுத்தறிவு இயக்கத்தை ஆதரிக்கும் மக்கள் ஒவ்வொருவரும் தங்களாலியன்ற பங்கெடுத்து இதை ஆதரிக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

இது சம்பந்தமான கடிதப் போக்கு வரத்து செய்து கொள்ள விரும்புபவர்கள் கீழ்கண்ட விலாசத்திற்கு எழுதி விபரமறிந்து கொள்ளலாம்.

கழகத்தின் சட்டங்களும் நோக்கங்களும்.

I இக்கழகம் தமிழில் "பகுத்தறிவு நூற்பதிப்புக்கழகம்" என்றும் ஆங்கிலத்தில் "The rational books publishing society" என்றும் அழைக்கப் பெறும்.

II இக்கழகத்தின் பதிவு செய்யப்பட்ட நிலையம் (Office) நிறை வேற்றற் கூட்டத்தார் தீர்மானிக்கு மிட்டத்தில் நிலைபெறும். கிளைச்சபைகள் இந்தியாவிலுள்ள பல்வேறிடங்களிலும் இலங்கை, பர்மா முதலான விடங்களிலும் நிறுவப்பெறும்.

III. இக்கழகத்தின் நோக்கங்களாவன:—

(1) எந்த நூலாக இருந்த போதிலும் பகுத்தறிவுக் கொள்கைக்கு மாற்றமில்லாததா யிருந்தால் பதிப்பித்து விற்பனை செய்தல்.

(2) பகுத்தறிவு கொள்கைக்கு மாற்றமில்லாத பழைய நூற்களைப் பதிப்பித்தலோடு அறிவுடைய தோழர்களைக் கொண்டு புது நூல்களியற்றச் செய்து பதிப்பித்து விற்பனை செய்தல்.

(3) பகுத்தறிவுக் கொள்கைகளைப் பற்றியனவும் அவற்றிற்கு மாறுபாடில்லாதவனுமான பொருள்களைத் தனி நூல்கள் மாதப் பத்திரிகைகள், வாரப் பத்திரிகைகள், தினப் பத்திரிகைகள் தமிழ், ஆங்கிலம், மலையாளம், தெலுங்கு, ஹிந்தி முதலிய மொழிகளின் வாயிலாக எளிய உரை நடையில் எழுதுவித்துப் பதிப்பித்து விற்பனை செய்தல்.

(4) ஆங்கிலத்திலும் மற்றும் பல மொழிகளிலுமுள்ள அறிவியல் நூற்களையும் கழக நோக்கத்திற்கு மாறுபாடில்லாத எந்நூற்களையும் தமிழில் மொழி பெயர்த்து விற்பனை செய்தல்.

(5) தமிழ் நூற்களை ஆங்கிலத்திலும் பிறமொழிகளிலும் மொழி பெயர்த்து பதிப்பித்து விற்று முதல் செய்தல்.

(6) இக்கழகத்திற் பதிப்பிக்கப்படும் நூல்களுக்கு அச்சிடும் உரிமை (Copy right) இக்கழகத்திற்கு வைத்துக் கொள்ளல் அல்லது நூலாசிரியர், உரையாசிரியர், மொழிபெயர்ப்பாசிரியர், பதிப்பாசிரியர்களுக்கு அச்சிடும் உரிமையை வைத்துக் கொள்ளும்படிசெய்வித்து நூல்களைப் பதிப்பித்தல்.

(7) நூலாசிரியர், மொழிபெயர்ப்பாசிரியர் இவர்களுக்குப் பிரதிபலன் அளித்தல் அல்லது அச்சிடப்படும் நூல்களிற் சிலபாகம் கொடுத்தல்.

(8) நூலாசிரியர், உரையாசிரியர், மொழி பெயர்ப்பாசிரியர் இவர்களுக்கு மாதாந்தர அலவன்ஸ் அல்லது போனஸ் (நன்கொடை) கொடுத்து உதவிசெய்தல்.

(9) இக் கழகத்தின் அச்சுவேலைகள் நடத்துவதற்கு அவசியமான அச்சுயந்திரங்கள் ரூலிங் யந்திரங்கள் அவ்வவற்றிற்குரிய மற்றும் சாமான்கள் கிரயத்திற்கு அல்லது வாடகைக்கு அமைத்தல்.

(10) கூலிக்குவரும் அச்சுவேலைகள் முதலியவற்றையும் நடத்தல்.

(11) இக்கழகத்தின் உபயோகத்திற்கும் அச்சுவேலை முதலியவற்றிற்கும் அவசியமான காகிதங்கள் முதலியன மொத்தமாய்த் தருவித்துக்கொள்ளுதல் அவைகளை விற்று முதல் செய்தல்.

(12) இக் கழகத்தின் நன்மைக்காக பலவிடங்களிலும் புத்தகக் கடைகள் ஏற்படுத்திப் புத்தகம் வியாபாரம் செய்தல்.

(13) பலவிடங்களிலும் கமிஷன் எஜண்டுகள் ஏற்படுத்திப் புதுதக விற்பனை செய்தல்.

(14) புத்தக வியாபாரிகளிடத்திலும் நூலாசிரியர்களிடத்திலும் புத்தகங்களைக் கமிஷனுக்கு வாங்கி விற்பனை செய்தல்.

(15) மூலதனத்தில் உபயோகத்திற்கு அவசியமில்லாத் தொகைகளையும் உபநிதி (Deposit) யாகவும் தொகைகளையும் சரியான பாங்கர்களிடத்திலும் சாமியபிணைப்பத்திரத்தின் (Security bond) மேலும் உறுதி மொழிப் பதிதிரங்களின் (Promissory Notes) மேலும் வட்டிக்கு கொடுத்து வாங்குதல்.

(16) இக்கழகத்தின் தொழில்கள் நடத்துவதற்கு ஆபீஸ் நடத்துவதற்கும் அவசியமான கட்டிடங்கள் கிரயத்திற்கு அல்லது வாடகைக்கு அமைத்தல் அல்லது மேனை கிரயத்திற்கு வாங்கிக் கட்டிடம் கட்டுதல் மராமத்துகள் [Repairs] செய்தல்.

(17) இக்கழகத்திற்கு அவசியமில்லாத தாவரசங்கம சொத்துக்களை விற்பனை செய்தல்.

(18) இக்கழகத்தின் தொழில் நடத்துவதற்கு அவசியமான தொகைகளை உறுதிமொழிப் பத்திரங்கள் (Promissory Notes) கடன் பத்திரங்கள் (Depenture Bonds) இவைகளின்மேல் அல்லது இக்கழகத்தின் சொத்துக்கள் விடுமுதற்றொகைகள் [Including uncalled Capital] இவைகளின் மேல் பிணைப் பத்திரங்கள் [Seaoily Bonds] கொடுத்தாவது கடன் பெறுதல்.

(19) இக்கழகம் ஏற்படுத்துவதற்காக நேரிடும் அச்சுக் கூலிகள் காகிதக் கிரயங்கள், விளம்பரச் செலவுகள், சிப்பந்திச் செலவுகள், வண்டி வாடகை, படிச்செலவுகள், பங்குகள் சேர்ப்பதில் ஏற்படும் கமிஷன்கள் இக்கழகம் ரிஜிஸ்டர் செய்வதில் ஏற்படும் ஸ்டாம்புச் செலவுகள் ரிஜீஸ்டர் கூலிகள் முதலிய ஆரம்பச் செலவுகளைக் கொடுத்தல்.

(20) இக்கழகத்தின் கொள்கைக்கு விரோதமில்லாத பிற சங்கங்களையும் அவைகளின் நிதிகளையும் இக்கழகத்துடன் ஒன்றுசேர்த்தல்

(21) இக்கழகத்தின் மூலதனம் இடங் கொடுக்குமாயின் இயந்திர சம்பந்தமான கைத்தொழிற்சாலைகள் நிறுவுதல்.

(22) இக்கழகத்தின் மிச்ச லாபத்தை இதன் கீழ் கண்ட பிரசாரம் "நம் மியக்க வளர்ச்சிப் பண்டிற்காக" ஏற்படுத்தியிருக்கும் தொகைகளைப் பிரதியேகமாக வைத்து அதிலிருந்து அடியிற்கண்ட நற்செயல்களை நடத்தல்.

(a) திருநெல்வேலி, மதுரை இராமநாதபுரம் ஜில்லாக்களிலொன்றில் நிறைவேறற கூட்டத்தார் (Directons) குறிப்பிடுமிடத்தில் தலைமையாகவும், மற்றும் பலவிடங்களிலும் கிளைகளாகவும் பகுத்தறிவு கழகங்கள் பாடசாலைகள், புத்தக சாலைகள், வாசகசாலைகள் ஏற்படுத்தியும் பகுத்தறிவு பிரசாரகர்கள் திட்டஞ்செய்து பலவிடங்களுக்கும் அனுப்பி நம்மியக்கக்கொள்கைகளைப்பிரசாரஞ்செய்வித்து நம் கொள்கைகளை யாண்டும் பரவச்செய்தல்.

(b) பகுததறிவிற்கு விரோதமான விழாக்கள், திருமணங்கள் முதலிய செயல்களைப்பற்றிய மூடக்கொள்கைகளை விளக்கி துண்டு பிரசாரம் வெளியிடல்.

(c) பகுத்தறிவு கொள்கைகளை யாவரும் எளிதில் மனதிற்கொள்ளும் வண்ணம் அக்கொள்கைகளைப்பரப்பும் நாடகம் முதலிய கம்பெனிகளை நிறுவல்.

(d) பகுத்தறிவுக் கொள்கைகளை விளக்கி மூடநம்பிக்கைகளையும் பழய குருட்டு பழக்கவழக்கங்களையும் இல்லையிலேயே ஓட்டிவிடவேண்டுமென்ற நோக்கங்கொண்ட ஆசிரியர்களைக்கொண்ட ஓர் உயர்தரக்கல்லூரியை நிறுவுதல்.

(e) இதன் தலைமை நிலையத்தில் திக்கற்றபிள்ளை, கைம்பெண்கள் ஆதரவற்ற மகளிர் முதலியோர்களை ஆதரித்து காப்பாற்றத்தக்க ஓர் நிலையமொன்று நிறுவி அவர்களுக்குக்கல்வி கைத்தொழில் முதலியன கற்பித்து திருமணம் நடத்திக்கொடுத்தல்.

(f) இந்த 22-வது உட்பிரிவு a முதல் e வரையுள்ள அறங்கள் சரியாய் நடத்துவதற்கு இக்கழகத்திலிருந்து கிடைக்கும் தொகை பொருள் தவிர வேறு நன்கொடைப்பொருள்கள் சேகரித்து நம்மியக்க வளர்ச்சிப் பண்டுடன் சேர்த்தல்.

(23) இக்கழகத்திற்கு லாபகரமான விதத்தில் இவைபோன்ற பிற தொழில்களையும் செய்தல்.

IV. (1) இக்கழகத்தின் அவயவிகள் (Shareholders) பொருப்பு அவரவர்கள் பங்குத்தொகைக்கு மேற் போகாமல் வரையறுக்கப்பட்டிருக்கிறது.

(2) இக்கழகத்தில் பகுத்தறிவு கொள்கைகளையுடையவர்களும் அதற்கு விரோதமில்லா கருத்துக்களையுடையவர்களும் பங்காளிகளாயிருக்க உரியவரவர்கள் ஆஜல் பகுத்தறிவு கொள்கைகளுக்கு மாறுதலான ஏந்த விஷயங்களும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

(3) இக்கழகத்தின் மிச்சலாபத்தில் நிறைவேற்றற்கூட்டத்தார் காப்புத்தனமாக எடுத்து வைக்கும் தொகைபோக மீதிலாபமானது வசூலாயிருக்கிற மூலதனத்தின் மேல் வருஷம் 1-க்கு 12-வீதம் அல்லது அதற்குக்குறைவாக இருந்தால் அவ்வித மிச்சலாபத்தில் பாதியை இக்கழகத்தின் பங்காளிகள் ஆதாலவீதமாக (Divedend) பிரித்துக் கொள்வார்கள், மற்றபாதியும் இக்கழகத்தின்மிச்சலாபமானது ஆல 1-க்கு 100-க்கு 12 வீதத்திற்கு மேற்படுமாஜல் அந்த லாபத்தில் பாதியும் இக்கழகத்தின்

தொடர்ச்சி 17-ம் பக்கம் பாக்க.

"கடவுளுக்கும் போலீசுக்கும் யார் பயப்படவேண்டும்? ஏன் பயப்படவேண்டும்?

(செய்கோன் அறிவானந்தன்)

கடவுளைப்பற்றிய ஆராய்ச்சி எல்லாம் பற்பல அறிவாளிகளால் உலகமெங்கணும் செய்தும், செய்து கொண்டும் வருகின்றார்கள். ஆனால் இன்னம் ஒருமுடிவுக்கும் வந்தார்களில்லை. ஒரு சாரார் இல்லையென்றும், பிரிதொரு சாரார் உண்டுயென்றும் மக்களை குழப்பத்திற்கேகொண்டு செல்கின்றார்கள். இல்லையென்னுங் கூட்டத்தார் கேள்விகளுக்கு உண்டு யென்போர் நம்பிலுல்தான் உண்டு என்னும்மூட ஞாயத்தைத்தான் சொல்லி மழுப்பி வருகின்றார்கள். சமீபத்திற்கூட தோழர். காந்தியார் கடவுள் காக்ஷி தனக்கு மின்மினிப்பூச்சிபோல் தோன்றுவதுண்டு என்று கூறியிருக்கிறார். என் செய்வது அவர் ஒரு மகாத்மா உலகப் பெரியார், இந்தியாவின் ஏக தலைவர் அவர் எது வேண்டுமானாலுஞ் சொல்லலாம். அத்தனையையும் கண்மூடித்தனமாக சுயபுத்தி கொஞ்சமேனுமில்லாமல் நம்பிப்பின்பற்ற அநேக மக்கள்கள் நம்மிந்தியாவில் இருக்கின்றார்கள். என்னைப்போன்ற ஒருவன் கூறியிருந்தால் அடே இவனென்ன ஒருபயித்தியக்காரன்போலும் எங்கேயாவது மின்சார வொயர்கள் நிறைந்த ஒரு அரையில் இவனிருந்திருப்பான், அக்காலத்தில் ஏதேனுவொயர்கள் ஒன்றோடொன்று பிணைந்து ஒளிவீசியிருக்கும் அதுசமயங்கண்ட மின்சார ஒளியைத்தான் இவன் கடவுள் காக்ஷி என்று கூறுகிறுனென்று கொக்கரி கொட்டிபரிகசிப்பீர்கள். உண்மை எவ்வாறிருப்பினும் ஆள்வோன் செயலேயை பொருத்திருக்கின்றன இதனால்தான் பொய்யுடையொருடன் சொல்வன்மையினுல் மெய்போலும்மே மெய்போலும்மே' என்று அதிவீரராம பாண்டியார்கூட செப்பியுள்ளார். இன்றைய இந்திய நாடு இவர் தம் வாக்குக்கு அரண் கோலிநிற்கின்றது.

ஈண்டு நாம் இல்லை உண்டு என்னும் ஆராய்ச்சிக்கு வந்தோமில்லை. இல்லை யென்போரை விடுத்து உண்டு யென்போரை ஆதரித்து நாமும் ஒரு கடவுள் இருப்பதாகவே வைத்துக் கொள்வோம். புல் பூண்டு மரம் செடி ஊர்வன பரப்பன நடப்பன முதலிய சகல ஜீவராசிகளும் அதனதன் இயற்கையின்படி தோன்றி மறைந்து வரும் இவ்வுலகில் கடவுளே மாத்திரம் என் இல்லையென்று நாம் சொல்லவேண்டும்? உலகம் யாவும் நமக்கு மாத்திரந்தான் சொந்தமா? இல்லையே பொதுஸ்தாபனமாகிய உலகத்தில் பேய் பிசாசு கடவுள்கள் இருந்தால் நாம் அதைத்தடுக்கவோ அல்லது தொலைக்கவோ எந்தவிதமான முகாந்திரமுமில்லை. உலகத்தில்தோன்றிய சகல ஜீவகோடிகளையும் எவ்வாறு அதனதன் முன்னோர்கள் ஆக்கி வைத்தார்களோ அதே மாதிரியே பேய் பிசாசு கடவுள் கூட்டங்களையும் அதனதன் முன்னோர்கள் ஆக்கித் தானிருப்பார்கள். இதை நாம் மறுத்து இல்லையென்றும் இருந்தாலும் கூடாதென்று கூறுதல் எவ்வாறு பொருந்தும்.

நாம் கடவுளென்ற ஒரு வஸ்து இருப்பதாகவே வைத்துக்கொள்வோம் ஆனால் அவ்வஸ்துக்கு என் நாம் பயப்படவேண்டும் என் நாம் வணங்கவேண்டும், எதற்காக அதனுதவியை நாம் எதிர்பார்க்கவேண்டும் என்பதுதான் ஈண்டு நாம் ஆராய வேண்டிய முக்கிய விஷயம். அவ்வஸ்துவும் நம்மைப்போல் உலகில் வாழ்ந்துவருகின்றது, எவ்வாறு அண்டை வீட்டுக்காரன் தயவு நமக்கு வேண்டியதிருந்தால் அவனுடன் கூடிக்குலாவுவோம் அவன்வேண்டும் பணியைச் செய்வோம் இல்லாவிட்டால் அவனை நாம் நினைக்கக்கூடமாட்டோம் அதேபோல் நாம் நமது காரியத்தைப்பார்த்துக்கொண்டு தன்னம்பிக்கையோடு பகுத்தறிவுக்கு மரியாதை செலுத்தி அறிவு மார்க்கத்தில் நடந்து செல்வோமாகில் அக்காலத்தில் நமக்கு ஏன் ஒரு கடவுள் துணையோ பயமோ அல்லது வணக்கமோ வேண்டும்? நன்கு சிந்தனை செய்து பாருங்கள். எவ்வாறு அண்டை வீட்டுக்காரன் நாம் அவனை மதிக்காமலும் அவனுடன் பேசாமலும் இருப்பதற்காக நம்மைக்கண்டிக்கவோ தண்டிக்கவோ முன்வருவானேயாமாயின் அவனை நாம் சும்மாவிட்டாமல் அத்தகைய முட்டாள் புத்தியுடைய வடிகட்டின முண்டத்தை உதைத்து விரட்டி அவனை ஒழித்து விடவுங் கூட எதிர்பார்ப்போமல்லவா! உலக அறிவாளிகளுள் அத்தகைய காதகனை எவ்வாறு மதிப்பார்கள் அவனை ஒருதுஷ்டன், காதகன், கொலைகாரன் என்று கூறமாட்டார்களா! உலக ஞானம் அவ்வாறிருக்க ஒரு பெரிய அறிவாளியாகிய கடவுள் தன்னை வணங்காத எதிர்பார்க்காத தொண்டு செய்யாத ஒருவனை தண்டிக்கவோ தண்டிக்கவோ முன்வருவாரேயானால் என் இத்தகைய கடவுளுக்கு மேற்கூறிய அடுத்தவீட்டுக்காரன் பட்டத்துக்கு மேல் மஹா மஹாபட்டத்தை சூட்டக்கூடாது என் இத்தகைய அறிவற்ற கடவுளை ஒழித்தால்தானென்ன! சகோதரர்களே! நன்கு சிந்தியுங்கள்.

உதாரணமாக ஒரு போலீஸ் நிலையம் இவைகளை எடுத்துக்கொள்வோம். ஒரு போலீஸ் சேவகனுக்கோ அல்லது நீதிவழங்குவோனுக்கோ என் நாம் பயப்படவேண்டும்? நாம் திருடியிருக்கவேண்டும், கொலை செய்திருக்கவேண்டும் அல்லது ஒரு குற்றத்தையாவது செய்திருக்கவேண்டும். இத்தகைய சட்டவிரோதமான குற்றமெதையுஞ் செய்யாத நாம் எதற்காக மேற்சொன்ன ஆசாமிகளுக்குப்பயப்படவேண்டும். எதற்காக அவர்களுக்குத் தொண்டு செய்யவேண்டும். தெற்றி வியர்வை நிலத்தில்விழ சம்பாதித்த பொருளைக் கொண்டு எதற்காக அவர்களைத் திருப்தி செய்யவேண்டும். விரும்பினால் அவர்களோடு பேசலாம். விரும்பாவிட்டால் அவர்களைத் திரும்பிப் பார்க்கக்கூட வேண்டாம். இவ்வாறு நாம் நடந்துகொண்டால் நாம் ஒரு விதக் குற்றத்தையுஞ் செய்யாதவர்களென்று நமக்கு அவர்கள் ஒரு நற்சாட்சிப் பத்திரங்கூட கொடுக்க முன் வருவார்கள். அவ்வாறின்றி இவனென்ன நம்மைக் கண்டு பயப்படவில்லையே என்ற அகங்காரத்தினால் தன்னிடத்தேயுள்ள அதிகாரத்தைக்கொண்டு நம்மைக் கண்டிக்கவோ, தண்டிக்கவோ முன் வருவார்களேயாயின் அவர்களது மேலதிகாரி அவர்களது அறிவற்ற செயலைக் கண்டு அவர்களை வேண்டும்படி தண்டித்து அவர்களது பதவியையும் ஒழித்துவிடுவார்கள். இது நம் கண்முன் அனுபவத்திற் பார்த்துவரும் உலக தோரணை.

அத்தன்மைத்தே ஒரு அறிவாளியாகிய கடவுள் தன்னை வணங்காததற்காகவும், வாழ்த்தாததற்காகவும், போற்றுதற்காகவும் தனக்கு வேண்டிய ஆகாரம், பொருள், வீடு வாசல், புஷ்பமாலை, ஆபரணமாலை இவைகளைக் கொடுக்காததற்காகவும் நம்மை அவர் தண்டிப்பாரேயானால் கண்டிப்பாக மேற்கூறிய போலீஸ் நீதி வழங்குவார்களுக்குக் கிடைத்த வெகுமதியைப்போல் இந்தக் கடவுளுக்கும் இவருக்கு மேலதிகாரியாக இன்ஸ்பெக்டர் கடவுள் இவர் தம் குற்றத்தையறிந்து இவருக்குத் தக்கத் தண்டனை விதித்து. இவரது அதிகாரப் பதவியையும் பரிமுதல் செய்துவிடமாட்டாரா? ஒரு அறிவுள்ள கடவுள் இத்தகைய இழிதகையான காரியத்துக்கு ஒரு நாளும் உடன்பட்டவே மாட்டார். அவர் பக்கா அறிவாளியானதால் தானே நமது கண்ணுக்கும் எண்ணத்துக்குங்கூட அகப்படாமல் அவ்வளவு பக்காவாக இருக்கிறார்.

ஆனால் கடவுளுக்குமேல் ஒரு ஆசாமி எது அவர்தான் ஏக தலைவராச்சுதே என்று ஆஸ்திகர்கள் கேட்கலாம். இதுதான் முக்கியமானவிடம், ஈண்டுதான் ஆஸ்திகக் கோட்டை பலமாகக் கட்டப்பட்டிருக்கின்றன. இங்குதான் கடவுள் இருக்கின்றார். இதைக் கண்டு ஏமாந்து மோசம் போகாதீர்கள். நன்றுகச் சிந்தனை செய்யுங்கள். ஆர அமர யோசனை செய்யுங்கள். பகுத்தறிவு என்னுஞ் செங்கோலை நடு நிலைமையில் ஊன்றி முடிவு காணுங்கள். கண்ணுற்காணுத ஒரு வஸ்து இருக்கிறதென்று ஒருவன் சொன்னால் என் நாம் இரண்டு இருக்கிறதென்று சொல்லக்கூடாது. அவனுங் கண்டவையல்ல. நாமும் கண்டவையல்ல. உலக நிகழ்ச்சியைக்கொண்டு அவனவன் பகுத்தறிவுக்கு நல்லவையும் பொருந்துவனவும் தோன்றுமேல் அதை என் ஒரு முடிவாகக்கொள்ளக்கூடாது. அதுதான் முடிவுங் கண்முன் காட்சியாகவும் அறிவாளர் செய்கையாகவுங் காணப்படுகின்றனவே. அவரவர் சொந்தப் பகுத்தறிவைக்கொண்டு மீண்டுமொருமுறை நன்கு பரிசீலனை செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

உலகில் நாம் பார்ப்பனனையுந்தும் ஒன்றுக்கொன்று துணையாகவும் ஒன்றிலிருந்து மற்றொன்று சமய நோக்கம்போல் மேல் கீழாகவும், கீழ் மேலாகவுந்தான் காணப்படுகின்றன. உதாரணமாகப் போலீஸ்காரன் ஒரு தப்பிதம் செய்தால் அவனைத் தண்டிக்க இன்ஸ்பெக்டரும், அவர்களுஞ் செய்தால் சூப்பரண்டும் எல்லோருஞ்

தொடர்ச்சி 17-ம் பக்கம் பார்க்க.

பார்ப்பனரல்லாத வாக்காளர்களே!
உஷார்! உஷார்!! உஷார்!!!
பார்ப்பனரின் புதிய தேர்தல் வலை.
இந்திய சாமான் பிரசாரணை.
ஏமாராதீர்கள்! ஏமாராதீர்கள்!!
விவரம் அடுத்த வாரம்
குடி அரசில் வெளிவரும்.

"தாய்நாடு முன்னேற்றமும், சுதந்திரமும், வீரமுமடையவேண்டுமானால், தாய்மார்களுக்கு கல்வி சுதந்திரம் வேண்டும்".

"பெண் கல்வியின் அவசியம்".

(சாக்கோட்டை. எஸ். ஆர். சாமி)

நாம் எழுதுவது, நொல்வது தெல்லாம்நிலருக்கு விருப்பமாகவும் இருக்கலாம். சிலருக்கு வெறுப்பாகவும் தோன்றலாம். ஆனல் விருப்ப முடையவர்கள்—ஊன்றிக் கவனிப்பவர்கள்—நடு நிலையிலிருந்து யோசிப்பவர்கள்—படித்தல், கேட்டல் முதலிய வைகளைக் கையாளுபவர்கள் ஒரு சமயம் வெறுப்புக்கொள்ளுபவர் களிடம் எடுத்துச் சொல்லவும் இயலவும். நாளடைவில் அவர்களைத்திருத்த வுங்கூடும் என்கொண்டே இக்கட்டுரையையும் குறிக்கப் புகுந்தேன்.

ஆண்களுக்கு மட்டும் பெருமை, இன்பம், மேன்மை, கௌரவம், வல்லமைமுதலியவைகளை நல்கும்கல்வி பெண்களுக்கும் அவைகளை நல்காதோ? என்ன கெடுதியைத் தரும்? என்ற எண்ணத்தை ஆண்கள் யோசியாமலோ, அல்லது பெண்களைத் தங்களுக்கு எப்பொழுதும் அடிமைகளாக்கிக் கொள்ள லாமென்றோ, அல்லது அசட்டை யினலோ, அல்லது சுய நலத்தை நாடியோ, பெண்களின் கல்வியை மறுத்தும், வெறுத்தும், கைவிட்டு விட்டார்கள். பூர்வ காலங்களில் ஔவை போன்றபெண்கள் கல்வியிற் சிறந்து விளங்கினர்கள் என்ற கதையை பள்ளிப்பிள்ளைகள் முதல் பட்ட ஆசாமிகள் வரை அறியாதார் களில்லை. என், இப்பொழுதுங்கூட ஒரு பெண் என்று சொல்லக்கூடிய வள்தான் (சரஸ்வதி) கல்வி யரசியாக என், தெய்வமாகவே கொண்டாடப் படுகின்றுள். அப்படி கல்விக்குத்தெய்வம் பெண்ணாகவே யிருந்தும், அவளை கொண்டாடு மக்களுக்கு, பொதுவாக ஆண்களுக்கு, சிறப்பாக தன் இனமாகிய பெண்ணினத்திற்கே கல்வியழகில் பங்கப்படுத்துகிற அப்பேதையை யிகழாமல் எப்படிப்புகழ்வது? என்ற கேள்வி வேறு இருக்கின்றது. அவளுக்காக வரும் திரு விழாவையும் ஒழித்து அதற்காக என் வீண் செலவு? என்ற கேள்வி அதற்கடுத்தபடியாகவேயுள்ளது. நிற்க

ஒரு தேசமோ, நாடோ, சமூகமோ, முன்னேற்ற மடைய வேண்டுமானல் அங்குள்ள மக்களின் கல்வி முன்னேற்றத்தை ஒட்டியே நிற்கும். நம் நாட்டை நோக்கு வோமாயின் ஆயிரத்துக்கு ஐம்பது பேர் ஆண்களும், பத்துப்பேர் பெண்களும் தவிர மற்றவர்களை படியாதார் கலத்திலேயே தேர்க்கப் படுகிறது. சில யிடங்களில் சில பட்டதாரிகளும், படித்தவர்களும், பண்டிதர்களும், பண்டிதைகளும்தோன்றினல்மட்டும் அந்த நாடுகல் விச்சருக்குடையநாடு என்று சோல்லி விட முடியாது. கல்வியில் சிறந்ததும், சங்கங்கள் தோன்றினதும் நம் நாடு, கம்பர் பிறந்தது மே நம் நாடு. அவதாரபுருஷர்கள், தியாகிகள், தோன்றியதும் நம் நாடு, ஆனல் அந்தக் கல்வியறிவு தான் தோன்ற வில்லை. அதுவும் சிறப்பாக பெண் கல்வியை நோக்குங்கால் மிக வருந்தத்தக்க நாடும் நம் நாடே. ஒரு குடும் பத்தில் உள்ள தந்தைகற்றறிந்திருப்பது அக்குடும்பத்திற்கு பெரும் புகழானல், தாயும்கல்வி பயின்றிருப்பது அள விறந்த புகழாகாதோ? என்பதை யோசிப்பவர் சிலரே. பெரும் பாலோர்—குடும்பத்தலைவர்கள், தலைவிகள் பெண்கள் கல்வி கற்றல் புருஷருக்கு அடங்கிநடவார். கள்ளக் காதலனுக்குக்கடிதம் எழுதுவார், அடுப்பூதும் பெண்களுக்கு (பிள்ளை பெறும் யந்திரங்களுக்கு) கல்வி எதற்கு? என்ற சொற் காரணங்களை முன்னிட்டே இருதரத்திலும் ஜனத் தொகையைவிருத்திசெய் தனரே யல்லாமல் பெண் கல்வியின் பிரயோஜனத்தைக் கனித்தார்களில்லை. வேண்டுமானல், "இந்திய சிற்றின்பத்தில் அதிகம் நம்பட்ட நாடாகவே தெரிகிறது. ஒருவர் மனைவியை தாதலித்தவுடப் பார்த்தே, ஒருவர் தூரி வீடுகதச் சொல்பதைப்பார்த்தோ, நான்சொல்ல வில்லை நாடிலுள் ஜனத்தொகையைப் பார்த்தே சொல்கி றேன்" என்று சொன்ன மிஸ். மேயோவைக் குற்றஞ்சொல்லத் தயாரா யுள்ளார்கள். சீறியும் விழுகிறார்களை, யல்லாமல் பெண்களின் கல்வி, சுதந்திர தாகத்தைதீர்த்தார் களில்லை.

இவர்களை ஒன்று கேட்க விரும்புகின்றேன். கல்வி யானது ஒரு மகனைக்காதலனுக்குகடிதம்எழுதச் செய்யுமாயின், அதே கல்வி ஒரு ஆணை, ஒரு மகனை கள்ளக்காதலிக்கு க்கடிதம் எழுதத் தூண்டாதோ? என்னே! இவர்களின் போக்கு!! கல்வியினல் நற்பு நிலைதவறுவாள் என்றல் கல்வி யால் ஒரு ஆண் கற்பு நிலைதவறமாட்டானே? அப்படி யானல் கல்லாத—படியாத பெண்கள் யாவரும் தீயவழியில் செல்லாமலும், கணவர்க்குஅடங்கியும் நடக்க வேண்டுமே! அப்படியாவரும் உளரா? ஆகவே ஒரு பெண் கெட்ட—தீய தொழில்களில் ஈடு படுவதெல்லாம், அன்னவளின் தாயின் ஒழுக்கமும், பழகும் சினேகிதத்தையும், கூடும் கூட்டத்தையுமே பற்றியது, பொருந்தியதுமே யல்லாமல் கல்வி யினல் கெடுவது என்பது அன்று! அன்று!! அன்று!!! தாய் கற்றறிந்த வளா யிருப்பின், காசு பிடுங்குதற் கென எழுதப்பட்டிருக்கும் சில கட்டுரைகளை, (Novls) புத்தகங்களை படிக்கத் தன் பெண்ணை விடாள். தன் பெண் பழகும், தோழியிட முள்ள, கூட்டத்தினிடமுள்ள தீய குணங்களை எடுத்துக்காட்டி, சொல்லித்திருத்திவிடுவாள். படித்த பெண்களும் கெடுவது முண்மையே. அதை நான் மறைக்க முடியவில்லை. அதற்குக்காரணம்படியாத, கற்காத, தாய் மார்களே என்பதை மேலே குறித்தேன்.

ஒருவேளை, ஒருத்தியோ எதைமறந்தாலும அன்பார்ந்த தாய் சொல்லை, புத்திமதிகளை, எந்நாளும் மறவான். மறவாள் என்பது உலகயியல்பு, ஆகையால் தாய்மார்கள் கல்வியில் பயிலாதவர்களின் தங்கள் பிள்ளைகளை நல்வழியில் திருப்ப எப்படி இயலும்? ஜார்ஜ் ஹெர் பெர்ட் என்ற அறிஞர் "ஒரு நல்ல தாய் நூறு நல்லாசிரியர்களுக்கு சமம்" என்றும் நெப் போலியன் என்னும் வீரர் "ஒரு குழந்தையின் ஒழுக்கம், தன்மை, அதன் தாயினத்தைப்பற்றியே நிற்கும்" என்றும், இன்னும் சில வைத்திய நிபுணர்கள் (Doctors) "பெண் மக்கள் கர்ப்பவதியாயிருக்குங் கால் அவர்கள் கொண்டுள்ள எண்ணங்களும், ஒழுக்கங்களுமே அக்கருவுக்கும் உண்டாதல் கூடும்" என்றும் இன்னும் இதைப்பற்றி கூறி யுள்ளவைகள் வாசித் தறிந்தவர் களுக்கு மறந்து போகக் கூடியதல்ல. நம் நாடு முதலில், பெண் களிலும், ஆண் களிலும் வீரர்கள் தோன்றின நாடாயிருந்ததற்கும், பிறகு (தற் பொழுது) கோழைகள் நிறைந்த நாடாயிற்றென்பதற்கும் எண்ணற்ற உதாரணங்கள் காணக்கிடக்கின்றன. யாவையும் குறிக்கப் புகின் நம் மருமைக் குடி அரசு இடந்தராது. உதாரணமாக அங்கநாச்சி என்னும் அறிவுடைய பெண்ணையும், கைகேயி கையைக் கொடுத்து ரதத்தை நடத்தி போர் செய்ய உதவி யளித்திருப் பதையும், படிக்கக் கேட்டிருக் கின்றோம். அது அவளுடைய வீரத்தை குறிக்கவில்லையா? ஒரு தாயை நோக்கி அவள் மகன் எங்கு எனக் கேட்க அதற்கு அவள் "என்மகனுக்கு போர்க்களத்திலன்றி இங்கு யாதுவேலை" என்றும், இன்னும் பிற நாடுகளில் பெண்கள் கல்வியிலும், வீரத்திலும் எவ்வளவோ மேம்பாடடைந்தாக சம்பவங்கள் நடந்தன, நடக்கின்றன. கிரேஸ் டார்லிங் என்னும் பெண் தன் தகப்பன் திகைக்கும் போழ்து தான் அஞ்சாமல் போய் கடலில் முழுகப்போகும் ஒன்பது மனிதர்களை உயிர்தப்புவித்தாள் என்றும், கேட்டிருக்கின்றோம். நெப்போலியன் என்னும் வீரன் தான் அத்துணை வீரமும், ஆற்றலும் பெற்றதுகல்வியறிவுள்ளதன் தாயின் அறிவுறுத்தல்களால் தான் என்று கூறியுள்ளார். ஆனல் இக்காலத்திலோ ஏதாவது கல்வியறிவுடையவர்கள் கூட்டத்தில் ஒரு பெண் புகப்பயம். அல்லது ஏதாவது கூட்டமாக ஜனங்கள் கூடி யிருப்பினும் அவ்விடத்திற்கு தங்கள் பிள்ளைகளை போகாது தடுத்து விடுகின்றனர். வெட்கம்! இவைகளுக்குக் காரணம் பெண் கல்வி யில்லாமையே, அறியாமையே. பெண்கள் தங்களுக்கு இயற்கை அழகு போதாது என நினைத்து செயற்கை அழகிற்காக ஒரு பெரும் தொகையை விழுங்கங்கூடிய நகைகள் வேண்டு மென தங்கள் காதலர்களைக் கேட்டு பணச்செலவு வைப்பதுவே அறியாமைக்கும், கல்வி யின்மைக்கும் போதிய அத்தாட்சியாகும். சிலகுடும்பங்களில் ஒற்றுமையாக வாழும்சகோதரர்களைப் பிரித்து வைப்பதும்பெண்ணினது அறியாமையையும், கல்வியின்மையுமே முதற் காரணமாகும். இன்னும் சிலயிடங்களில் (குடும்பங்களில்) புருஷன் கல்வியிற்பயின்றவனாகயிருப்பான். சுகாதாரவசதியுடன் இருக்க ஆசைப்படுவான் சீர்திருத்த முறைப்படி இருக்க பிரியப்படுவான். ஆனல் மனைவி கல்வியறிவில்லாவிடிலோ சுகாதாரம் என்றல் என்ன என்றேதெரியாது நடந்துகொள்வாள். உபயோகமில்லாப்பண்டைய காலத்து வழக்கத்தைத்தான் குரங்குப்பிடியாய் பிடித்திருப்பாள். கணவன்போல மனையாளும் கல்விபயின்று இருப்பின் ஒத்தமனத்தினராய் இருவரும்தீய வழியில் செல்லாதவர்களாயிருப்பர் என்பதுதவறு அல்ல. கல்வியறிவுள்ளபெண் தன்வீட்டுக்காரியங்களை தன் ஆணுக்கும் சாதக முறையில் உதவிபுரிந்து தன்பிள்ளைகளையும் நல்லமுறையில் படிப்பித்து அவர்களுக்குத்தன் நடையிலேயே நல்லொழுக்கமுறைகளை போதித்து விடுவான். அப்படிநடந்துகொள்ளவும் இயலும்.

ஆகவே தாய்நாடு வீரமுள்ள சுதந்திரமுள்ள முன்னேற்றமுள்ள ஒழுக்கமுள்ள நாடாக இருக்கவேண்டுமென விரும்பினல் தாய்களாக வரப்போகும் பெண்மக்களுக்கு கல்வி அவசியம்வேண்டும் அதற்கானமுயற்சிகளை இன்னும் மேன்மேலும் பெண் கல்விவிருத்தியடைதல் வேண்டும்" "முகத்திரண்டு புண்ணுடையர் கல்லாதவர்" என்பதையும் 'கல்வியினுங்கில்லை சிற்றுயிர்க்குற்றதணை' என்பதையும் பாமரமக்களும் வைதிகக் குடுக்கைகளும் பெண்கல்வி பெண்கள் சுதந்தரம் இவைகளுக்கு முட்டுக்கட்டையாயிருப்பவர்களும் இவர்களுக்கு வால்பிடிக்கும் கோடரிக்காம்புகளும் மனதிலிருத்திப் பெண்கல்விக்குப்பாடுபடல் வேண்டுமென கூறி முடிக்கின்றேன்.

இந்துக்கள் பசுவைத் தெய்வமாகக்கொண்டாடுவது ஏன்?

(மயிலை சீனி வேங்கடசாமி)

இந்துக்கள் பசுவைத் தெய்வமாகக் கொண்டாடுகிறார்கள், பஞ்சகவ்வியம் என்பதில் பசுவின் மலமாகிய சாணத்தையும், மூத்திரமாகிய கோமயத்(கோமூத்திரம்) தையும் கலந்து சாப்பிடுகிறார்கள், பசுமூத்திரத்தை கையில் பிடித்து தலைமேல் தெளித்துக் கொள்ளுகிறார்கள், பசுவைக் குளிப்பாட்டி மஞ்சள் குங்குமம் பூசி காலில் விழுந்து கும்பிடுகிறார்கள். மாமிசம் சாப்பிடுகிற இந்துக்கள் கூட, பசு அல்லது மாட்டு மாமிசத்தைச் சாப்பிடக்கூடாதென்றும் அது மகாபாவம் என்றும் சொல்லுகிறார்கள் பசுவுக்கு, இந்துக்கள் இவ்வளவு மகத்துவம் கொடுக்க வேண்டியதன் காரணம் என்ன? இந்தியாவைப் பற்றி சிலேட்டர் (Slater) என்பவர் ஒரு புத்தகம் எழுதியிருக்கிறார், அதில் இவ் விஷயத்தை எழுதியிருக்கிறார், அது வருமாறு:—

மிகப் பழைய காலத்தில் இந்தியாவில் மாடு (பசு, எருது) கிடையாது. அவை, இந்தியாவுக்கு வெளியேயுள்ள அயல் நாடுகளில் இருந்து இந்தியாவுக்குக் கொண்டு வரப்பட்டன. அப்படி இந்தியாவுக்குக் கொண்டு வரப்பட்ட மாடுகள் அப்பொழுது மிகச் சிறு தொகையாயிருந்தபடியால், மாடுகளின் தொகையை மிகுதிப்படுத்துவதற்காக மாட்டைக் கொல்லக் கூடாது என்று சட்டம் செய்தார்கள். அந்தச் சட்டத்தை தெய்வ சம்பந்தமாகவும் சமய சம்பந்தமாகவுப் செய்து விட்டால் ஒருவரும் மாட்டைக் கொல்ல மாட்டார்கள் என்று கருதி மாடு, தெய்வ சம்பந்தமான தென்றும் அதைக் கொல்லுவது மகாபாவம் என்றும் எழுதி வைத்தார்கள் என்று இவ்வித கருத்துப்படும்படி அவர் அப்புத்தகத்தில் எழுதியிருக்கிறார்.

ஆராய்ச்சிக்கு இது பொருத்தமாகத்தான் தோன்றுகிறது. எல்லா ஊர்களிலும், முற்காலத்தில் எல்லாவித மிருகம், பறவை, செடிகள் இருந்ததாகத் தெரியவில்லை. ஆதிகாலத்தில் அதாவது ஐரோப்பியர் போவதற்கு முன்; அமெரிக்கா கண்டத்தில் குதிரைகளே கிடையாது, ஆதிகாலத்தில் இந்தியாவிலுங்கூட குதிரைகள் கிடையாது. குதிரை இந்தியாவுக்குச் சொந்தமான மிருகம் அல்ல. அவ்விதமே பசுவும் ஆடும் ஆஸ்ட்ரேலியா கண்டத்தில் ஆதிகாலத்தில் கிடையாது. இந்தியாவை எடுத்துக் கொண்டால், குதிரை, ஒட்டகை, வான்கோழி, ஜின்கோழி முதலிய பிராணிகள், இந்தியாவில் பண்டைக்காலத்தில்கிடையாது. இப்பொழுது விறகுக்காக உபயோகப்படும்சவுக்குமரம், சூட்டிப்பலாம்ரம். டிவிடிவிம்ரம், கொய்யாமரம், சீத்தாப்பழம் [சீதப்பழம்] மரம், அன்னாசி, பப்பளி, ஆரஞ்சி, நிலக்கடலை, இங்கிலீஷ் காய்கறிகள், மாவள்ளிக் கிழங்கு முதலியவைகளெல்லாம், அந்நிய தேசத்திலிருந்துதூதனமாக நமது நாட்டில் கொண்டுவரப்பட்டவை. இப்பொழுது நாம் தினந்தோறும் சாப்பாட்டில் உபயோகித்துவருகிற பிளகாயும் உருளைக் கிழங்கும் அன்னிய நாட்டுப் பொருள்களே தவிர இந்தியாவின் சொந்தப்பொருள் அல்ல. சில தூற்றாண்டுகளுக்குமுன் இருந்த நமது மூதாதைகளுக்கு இந்தப் பொருள்களைப்பற்றி ஒன்றும் தெரியாது. சரித்திரத்தை யொட்டி ஆராய்ச்சி செய்வோருக்கு இப்பொருள்கள் எல்லாம் அயல் நாட்டுப்பொருளகள் என்றும் பின்னர்தான் நமது நாட்டில் அவைகள் கொண்டு வரப்பட்டன என்றும் தெள்ளிதில் விளங்கும்.

இந்தப் பொருள்களைப் போல வே மாடு [பசுவும் எருதும்] அயல் நாட்டிற்குச் சொந்தமான மிருகமாயிருந்திருக்கலாம். பிறகு இந்தியாவில் கொண்டுவரப்பட்டிருக்கலாம். பாலும், அதன் மூலமாய் தயிர் நெய் மோர்கள் கிடைப்பதால் பசு அதிக உபயோகமுள்ள மிருகம் என்று கண்ட அக்காலத்து ஜனங்கள் பசுவைக்கொல்லக்கூடாது என்பதற்காக பசுவின் உடம்பில் தெய்வங்கள் வாழ்கின்றன என்றும் பசுவைக்கும்பிடவேண்டு மென்றும், பசுவைக் கொல்வது பாவம் என்றும், பசு மாமிசம் சாப்பிடுவது மகாபாவம் என்றும் எழுதிவைத்தார்.

ஆனல், எருமை இந்தியாவின் சொந்த மிருகம் என்று நினைக்க இடமுண்டு. எப்படி என்றால், காளிகோயில்களில் எருமைகளைப் பலி கொடுத்து வந்தார்கள்; வருகிறார்கள். ஆனல், பசுவை பலி கொடுப்பதில்லை. இதிலிருந்து என்ன தெரிகிறதென்றால், எருமைகள் இந்தியாவின் சொந்த மிருகமாய் ஏராளமாயிருந்தபடியால் அதைக்கொல்வதைத் தடுக்க சட்டம் செய்யவில்லை என்றும், பசு இந்தியாவில் தூதனமாகக்கொண்டுவரப்பட்ட அயல்நாட்டு மிருகம் ஆகையால், அதை விருத்தி செய்வதை நோக்கமாகக்கொண்டு பசுவைக்கொல்லக்கூடாதுதென்று பண்டைக்காலத்தில் சட்டம் செய்திருக்க வேண்டும் என்றும் தோன்றுகிறது.

இந்தச்சட்டம் ஏற்படுத்தியதனல் தான், மாட்டு மாமிசம் சாப்பிட ஆசைப்பட்ட பார்ப்பனர், யாகம் என்று சொல்லி சாமிகளின் பேரால் மாட்டுமாமிசம் புசிக்கும் வழக்கத்தை ஏற்படுத்திக் கொண்டார்கள் போலும்.

மாட்டின் அபிவிருத்தியை யுத்தேசித்து செய்யப்பட்ட சட்டம் நாளடைவில் எருதை சிவன் வாகனமாகவும் பசுவைக், காமதேனுகவும், தெய்வப்பிறப்பாகவும் ஜனங்களை நம்பும்படிச் செய்து விட்டதோடு, எருதின் சாணத்தைச் சுட்டு நெற்றியில் பூசிக்கொள்ளவும் பசுவின் சாணத்தையும் மூத்திரத்தையும் நெய்பாலுடன் கலந்து சக்கிக்குடிக்கவும் ஏற்பட்டு விட்டது. அன்றியும், பசுவை தெய்வமாகக்கொண்டாடும் இந்த மூட நம்பிக்கைதான் இந்து முஸ்லீம் சச்சரவை பல இடங்களில் உண்டாக்குகிறது.

இப்போது, ஆரிய சமாஜத்தைச்சேர்ந்த ஒருவர், பசுவைக்கொல்வது ஆட்டைக்கொல்வது போல் பாவிக்கவேண்டும் என்றும் பசுவைக்கொல்வது மத சம்பந்தமானதாகக் கருதக்கூடாதென்றும் சொல்லுகிறார். அவருக்கு இப்போதாவது பகுத்தறிவு உதயமாயிருப்பதற்காக மகிழ்கிறோம்.

கள்ளிக்கோட்டை

நகர சபையில் சமதர்ம உதயம்.

சென்ற 20-ந்தேதி நடைபெற்ற கள்ளிக்கோட்டை முனிசிபல் சபைக்கூட்டத்தில் திருவள்ளூரிலுள்ள பெரிய குளத்தை சகல வகுப்பாரும் உபயோகிக்கலாமென்று ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

திருமண ஒப்பந்தரத்து.

(S. G)

"புதுவை முரசு" ஆசிரியர் தோழர் பொன்னம்பலனர் அவர்கட்கும், திருமதி சுலோசனு அவர்கட்கும் 24—5—31ல் ஏற்பட்ட விவாக ஒப்பந்தமானது இருவருடைய அபிப்பிராயப்படிக்கும் 8—4—32ல் ரத்து செய்யப்பட்ட செய்தியை அறிந்தேன்.

கல்யாணம் என்பது தெய்வீகத்தன்மை பொருந்தியது என்று நம்பியிருப்பவர்களுக்கு மேற்கண்ட நமது தோழர்கள் இருவரும் அவ்விதம் அல்லவென்று நிரூபித்ததோடு மனதுக்கொவ்வாதபடியால் இருவரும் நிரந்தரமாய்ப்பிரிந்து விடுவதற்குச்சம்மதித்ததற்காக இருவரையும் நாம் பெரிதும் பாராட்டக்கடமைப்பட்டிருக்கிறோம்.

சுயமரியாதை இயக்கத்தில் முதன்முதல் தைரியமாக விவாகரத்து (Divorce) செய்த இருவரையும் நாம் பாராட்டுவதோடு இனியாவது இவர்களைப்போல் பிறரும் ஏமாந்து திடீரென்று மணம் செய்துகொள்ளாமல் நீண்டநாள் அந்நியோந்நியமாகப்பழகியபின்பே மணஞ்செய்து கொள்ளவேண்டுமென்பதோடு சேர்ந்து வாழ இஷ்டமில்லாத ஜோடிகள் ஆயுள் முழுதும் துன்பக்கடலில் அழுந்தியிருப்பதைவிட தைரியமாக விவாகரத்துச்செய்து கொள்ளவேண்டுமென்பதையும் வற்புறுத்தி இவ்விஷயத்தில் தமிழ் நாட்டிற்கு வழிகாட்டியாக இருந்த சுலோசனு பொன்னம்பலனர் ஆகிய இருவரையும் மறுமுறையும் பாராட்டுகிறேன்.

திரு. ராமசாமி முதலியார்

அலகாபாத் பயோனீர் பத்திரிகையின் பொருப்பாளர்கள் மெடிபத்திரிகையின் ஆசிரிய ஸ்தானத்துக்குநிவான்பகதூர் எ. ராமசாமி முதலியார் அவர்களைத்தேர்ந்தெடுத்திருப்பதாக ஒரு செய்தி வெளியாயிருக்கிறது.

தோழர் காளியப்பன்.

தோழர் காளியப்பன் அவர்களது தற்போதைய விலாசம் கீழ்க்கண்டவையாகும். அவருக்குக் கடிதங்களோ, அழைப்புகளோ எழுதும் நண்பர்கள் கீழ்க்கண்ட விலாசத்திற்கே எழுத வேண்டுகிறோம்.

நாகை N. B. காளியப்பன்
படப்பக்காடு, மதுக்கூர் போஸ்ட்,
பட்டுக்கோட்டை வழி.

காங்கிரசும் சுயமரியாதையும்.

களக்கமற்றவர்களே!

(சென்னை பரீமதி எ. சுந்தரி எழுதுவது)

காங்கிரஸ்:—நண்பரே தங்களைக் கண்டு மூன்று வாரமாயிற்று அன்று தான் "காங்கிரஸே" இனி இந்தியாவில் தலை எடுக்கா தென்று சொன்னீரே! இன்று என்ன சொல்லுகிறீர்.

சுயமரியாதை:—முன்பு சொன்னதை மீண்டும் வற்புறுத்தி அழுத்தமாய்க் கூறுகிறேன்.

கா:—ஓகோ சரிதான் தாம் பத்திரிகையே படிப்பதில்லை போலும், நாளை 29ந் தேதியில் மாளவியாவின் தலைமையில் அகில இந்திய காங்கிரஸ் கூடப் போவது தமக்குத் தெரியாது போலும்!

சு:-ஆமாம் தாங்கள் படித்தரிந்த செய்தி எனக்கும் தெரியும் கூடப்போவதாக வந்த செய்தியைக் கொண்டு கூடி விட்டுப் போகிறது என்று ஆகாய கோட்டை கட்டுகிறீரா?

கா:-இல்லை அதைப்பற்றி தங்கள் அபிப்பிராயம் என்ன? இனியாவது காங்கிரசுடன் தாம்சமாதானம்செய்து கொள்ள எண்ணுகிறீர்களா? என்றே கேட்டேன்'

சு:—இறந்து போன பெயரைப் புதுப்பிக்க அதை ஜனங்கள் கவனத்துக்குக் கொண்டு வர தேசீய நிபுணர்கள் செய்யும் புரட்டுக்கு பெயர் டில்லி காங்கிரஸ் என்பது. அது கூடினும் மூன்றேஅரைக்கால் பெயர்தான் கூடுவார்கள். அதைப்பற்றிஎனக்குக்கவலையில்லை.

கா:—போகட்டும் எங்களுடன் சமாதானத்துக்கு அதன் பின்பு வருகிறீர்களா? என்று கேட்கிறேன்.

சு:—எப்படியப்பா அது முடியும் நாமெல்லாம் பாப்பானுக மாறினாலும் மாறிவிடலாம், சுயமரியாதைக்காரன் காங்கிரஸ்காரனுக முடியாது.

கா:—"காங்கிரசி"ல் தீண்டாமை விஷயமும், மதஒருநிலைமை விஷயமும், சத்தியாக்கிரகம், சட்ட மறுப்பு இவைகளும் ஓர் முடிவுக்கு வந்து விட்டால் அதன் பின்பு என்ன?

சு:—அதன் பிறகு தான் இன்னும் பலமாக நாங்கள் உங்களுடன் போராடித் தீரவேண்டிவரும் "ஜனநாயக ஆட்சி" என்று தாங்கள் செய்யும் பித்தலாட்டங்களை ஜன சமூகம்உணரும்படி செய்ய வேண்டுவதே எங்கள் கடமை, அதை செய்து முடித்து விடுவோம்.

கா:—அப்படியானால் "காங்கிரஸ்" என்ற பெயர் அடியுடன் அழிந்து போக வேண்டுமென்பதே உங்கள் கொள்கையா?

சு:—ஆமாம் என் புதிதாக கேட்கிறீர்கள்- இன்று பத்து வருடங்களுக்கு முன்பேஎங்களியக்கம் இதைத் தான் சொல்லிற்று இன்னமும் இதைத் தான் வற்புறுத்துகிறோம்.

கா:—நாமிருவம் சேர்ந்து வேலை செய்ய வழியே கிடையாதா?

சு:—கிடையாதப்பா கிடையாது?

கா:—எதிர்கால நிலைமை தான் என்ன ஆகும்.

சு:—என்ன ஆகும் இன்று அகில இந்திய ஸ்தாபனம் சர்க்காருடன் போர் தொடுத்து இருப்பதாகவும், சீர்திருத்தம் நீங்கள் கேட்கிற அளவுக்கு கொடாவிட்டால், புது சீர் திருத்தத்திலும் ஒத்துழைக்கப்போவதில்லை என்று சாங்கோ பாங்கமாக கூறினீர்கள் ஆனால் நடப்பதுஎன்ன? இது பாமரர்களுக்கு இன்னுமெதெரியவில்லை.

கா:—என்ன நடந்து விட்டது என்கிறீர்.

சு:—எல்லைப் புறத்தில் காந்தி போராட்டம் கடுமை என்கிறார்கள். எல்லைப்புற காந்தி ஏராளத் தொண்டர்களுடன் சிறை புகுந்ததாக கூறுகிறார்கள் இன்று புதிதாக நடைபெற்ற தேர்தலில் ஹிந்து மகா சபையாரும், மாஜி காங்கிரஸ் காரரும், புது காங்கிரஸ் காரரும், சீக்கியர்களும் அபேட்சகர்களை நிறுத்தியிருக்கிறார்கள்.

கா:—அதுவா? புது தேர்தலில் தேசீயகாரர்கள் அபேட்சகர்களாக நின்றால் தப்பு என்ன?

சு:—தப்போ, தவறோ ஒன்றுமில்லை எல்லைப்புறத்திற்குச் சீர்திருத்தம் இன்ன மாதிரியாக வேண்டுமென்று கேட்ட முஸ்லீம்கள்யேமாற்றமடைந்து சிறையில் கிடக்கிறார்கள் அத்தகைய சீர்திருத்தம் வழங்கக் கூடாது வழங்கினால் நாங்கள் போர் தொடுப்போம் என்று சொன்ன காந்கிரஸ்கான் மற்ற பெயரால் எல்லைப்புற முஸ்லீம்களை தோற்கடிக்கமுயன்றார்கள். இந்த நிலைமையே சற்று மாறுதலுடன் மற்ற மகாணங்களிலும் நடை பெற போகிறது.

கா:—இந்தப்படி செய்ய காங்கிரஸ் அநுமதி கொடுத்ததா?

சு:—கொடுத்தால் கூட அது யோக்கியமாக இருக்கும் மறை முகமாய் ஏமாற்றுதல் நடக்கிறதே இதை தேசீய பத்திரிகைகள் எடுத்துக் காட்டக் கூடாதா?

கா:—45, 46 வருடங்களாய் இன்னுட்டு உண்மை பிரதிநிதி ஸ்தாபனமாயுள்ள ஒன்று அழிய வேண்டுமென்று நீர் சொல்லுவது மிக கொடுமையானது நீர் ஓர் இந்தியர் தானா?

சு:—100, 150 வருடமாய் இந்நாட்டை இதற்கு முன் இருந்தமிருக ஆட்சியை விட உயர்வாக ஆண்டு வருபவர்களை போ என்று நீங்கள் சொல்லுகிறீர்களே? இது இந்தியத் தன்மையா? மனிதத் தன்மையா? எந்த தன்மை என்கிறீர்.

கா:—அதற்கு தான் அவ்விதம் கூறுகிறீர்கள் தேசீய காங்கிரசின் ஆணைக்குக் கட்டுப்பட்டு எத்தனை ஆயிரம் பேர்சிறை புகுந்தார்கள், எத்தனை உன்னத நிலையிலுள்ளோர் தியாகம் செய்து சிறையில் தவிக்கின்றார்கள். கண்ணியமும், களங்கமுமற்றவர்களுமான எத்தனை உயரிய படிப்பாளிகள் அதில் சேர்ந்து வேலை செய்கிறார்கள் இதில் உதாரணத்திற்கு ஒரு ஆள் உங்கள் சுயமரியாதை இயக்கத்திலுண்டா?

சு:—கடவுளும் இல்லை, புடலங்காயும் இல்லை என்று தெரிந்தும், இந்நாட்டில் தினம் எத்தனை ஆயிரமல்ல—லக்ஷம் மக்கள் கடவுளுக்கு அழுகிறார்கள், கோயிலுக்குப்போகிறார்கள் இவர்களின் வாழ்க்கை, யோக்கியமானவர்கள் எத்தனைபேர், பக்தியின் பேரால் செடில், அலகு குத்தி சாகும்மனிதர்கள் கிடக்கட்டும், தன் பணமெல்லாம் கொடுத்தழுது பட்டினி கிடந்து சாகிறான். இதை விட படித்தமாணவர்கள், இளைஞர்கள் ஏமாற்றத்தால், மூடத்தனத்தால் அர்த்தமே தெரிந்துகொள்ளாமல் சிறைபுகுவதா? ஆச்சர்யமாகதோன்றுகிறது. கண்ணியமானவர்களென்கிறீர்கள்அவர்கள்பெயரைகளங்கமற்றவர்கள் என்றீர்கள் அவர்கள் பெயரை கூறுங்கள் சற்றுபார்ப்போம். காந்தி, தினம் மூன்று ரூபாய்க்கு ஆப்பிளும், ஆரஞ்சும் தின்று சிறையில் தவிக்கிறார். வங்காள சிங்கங்களான போசும், சென்குப்தாவும், தினம் ராஜோஉபசாரமாக சாப்பிடுவதுடன் வீட்டுக்கு மாதம் மாதம் ரூபாய் 1000 மும் 300-ம் சர்க்காரில் பெற்று அனுப்புகிறார்கள். இது களங்கமற்ற தன்மையா? இன்னம் பத்திரிகையில் செய்திவராது பணவுதவி பெற்றவர்கள் எத்தனைபேர்! நமக்கு தெரியுமா? மிஞ்சிய பிரபல களக்கமற்றவர்கள் அத்தனைபேரும் ஏ வகுப்பு கைதிகள் இத்தகைய களக்கமற்ற தியாகிகள் எங்களில்யாருமில்லை என்பதை ஒப்புக்கொள்ளுகிறேன்.

கா:—போகட்டும்ஒருக்கால் டில்லியில் பேருக்காவது காங்கிரஸ் கூடினால்!

சு:—கூடினால் கூடட்டும் அது ஒரு மறியல் நடப்பதுபோலதான். சிறுகிளர்ச்சி

கா:—கிளர்ச்சியோ, இல்லையோ கூடினால் அதைப்பற்றி தாங்கள் சொல்வதென்ன!

சு:—கூடாது, கூடினால் அகில மன்னர்கள் சங்க சிபார்சு மீதும், அகில மிதவாத சங்க சிபார்சு மீதும் கூடவேண்டும் இவ்விருவர்களோ இன்று ஆதிதிராவிடர்களையும், முஸ்லீம்களையும் எமாற்றவும், சர்க்காரை மிரட்டவும் ஒருவழி தேடுகிறார்கள். அதன் பயனைய் கூடினால் நாங்கள் இன்று கொஞ்ச நஞ்சமுள்ள உங்கள் யோக்கியதையும் ஜனங்களுக்கு எடுத்துச்சொல்லவேண்டியதே?

கா:—சொல்லுங்கள் இந்த மாகாணத்தில் மட்டும்தானே! உங்களால் இதைச்செய்ய முடியும்?

சு:—ஒவ்வொரு மாகாணத்திலும் வெவ்வேறு முறையிலும், பேரிலும் எங்களண்ணன்கள் உண்டு. எங்களைப்பொருத்தவில் இம்மாகாணத்தில் இதை செய்துவிட்டால் போதும் என்றே திருப்தியடைவோம்.

கா:—இனி காங்கிரசை குற்றம் கூறினால் தொலைந்தீர்கள்.

சு:—நாங்கள் விரும்புவதும் அப்படித்தான் நீர் அனுதாபப்படவேண்டாம்.

கா:—புது சீர்திருத்தம் வழங்கப்பட்டதும் அதற்கும் காங்கிரசின் அபேக்ஷகர்கள் நிற்பார்கள் என்கிறீர்களா?

சு:—ஆமாம் இன்று இந்தியசாமான்அபிவிருத்தி சங்கம்தான் இத்தேர்தலுக்குதலைமைசங்கமாகப்போகிறது

கா:—உங்கள் நண்பர்கள் கட்சியான 'ஜஸ்டிஸ்! கட்சியில்தான் பிரமணர்களைச்சேர்த்துக்கொள்ளபோகிறார்களே!

சு:—அக்கக்ஷியில் சிலர் அவ்விதம் கூறினார்கள் ஆனால் நேற்று லாமெம்பர் கிருஷ்ண நாயருக்கு பார்ப்பன வக்கீல்கள் பத்திரமளிக மறுத்ததின் மூலம் ஜஸ்டில் கக்ஷியில் எமாறியிருந்தவர்கள் விழித்திருப்பார்கள்.

கா:—உங்கள் தலைவர் தோழர் ஈ. வெ. ராமசாமி அவர்கள் ஐரோப்பா சென்றபின்பு உங்கள் சப்தம் கொஞ்சம் கம்மியாமே! குடி அரசு பேப்பர் கூட சந்தா குறைகிறதாமே!

சு:—ஆமாம் அவர்போனதும் நமது பிரசங்கம்கூட செய்யமுடியாத சென்னையில், பச்சயப்பன் மண்டபத்தில் பிரம்மாண்ட கூட்டம் கூடியது. நாளை சேலத்தில் ஜில்லா சுயமரியாதை மகாநாடும், அதன் பின்பு ஜோலார்பேட்டையிலும், மன்னார்குடியிலும், ஈரோட்டிலும், காரைக்குடியிலும் மகாநாடுகள் நடைபெறப் போகின்றன. அத்துடன் நாகர்கோயில் மகாநாட்டுக்கும் வரவேற்பு கழகம் ஏற்பாடு செய்யப்பட்டுவருகிறது. 'குடி அரசு' சென்ற 1931ல் 4000 4500 காபிகளே போகின்றன என்று ஈ. வெ. ரா. கூறினர் இன்று ஆறாயிரத்து எழுநூறு: ஏழாயிரம் போகிறது. சிலோனிலும், பர்மாவிலும் நமதியக்க மகாநாடுகள் நடைபெறப் போகின்றன இவைகளெல்லாம் 'சுயமரியாதை' இயக்கம் சப்தக்கம்மியான தேதான் காட்டுகிறது.

கா:—இதற்கெல்லாம் உங்களுக்கு பணமேது மாகாண சங்கத்திலிருந்து பொருள் கொடுத்து இதெல்லாம் நடக்கிறதா?

சு:—ஏது எங்கள் சங்கத்தில் பண

பட்ட பின்னர் மணம்புரிந்துகொள்ளுவதால் எக்காலத்திலும் மணவிடுதலை செய்து கொள்ளுவதற்கு இடமிருக்காதென்பதில் ஐயமில்லை. தோழர்கள், பொன்னம்பலனார், சுலோச்சனை மண ஒப்பந்தமும் இவ்வாறு ஆரம்பத்திலேயே கொஞ்சம் நன்றாய் ஆலோசனை செய்தபிறகு நடைபெற்றிருக்குமாயின் இப்பொழுது மண ஒப்பந்தத்தை நீக்கிக்கொள்ளும்படியான நிலைமை ஏற்பட்டிருக்க முடியாது என்பதே நமது உறுதியான எண்ணமாகும்.

ஆகையால், நமது இயக்க அன்பர்களும், வாலிபர்களும், பெண்களும் இம்மணவிடுதலையைக்கண்டு, சுயமரியாதை மணம், கலப்பு மணம், விதவைமணம், விவாகவிடுதலை செய்து கொண்ட பெண்ணையோ, ஆணையோ மணஞ் செய்து கொள்ளுதல் ஆகிய காரியங்களில் ஊக்கம் குன்றாமலிருக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறோம்.

இறுதியாகத் தோழர் பொன்னம்பலனார் அவர்கள் தமக்கும், திருமதி சுலோச்சனை அவர்களுக்கும் முள்ள மண ஒப்பந்தத்தை நீக்கிக் கொண்ட செய்தி அவருடைய தோழர்கள் பலருக்கும் சிறிது மனத்துயரை உண்டாக்கக் கூடியதாயினும், அவருடைய உண்மையான வீரத் தன்மையைப் பாராட்டுமாறு செய்யாமலிருக்க முடியாது.

மண மக்கள் இருவருள் எப்பொழுது ஒருவர் வாழ்க்கை முறைக்கு மற்றொருவர் ஒத்து நடக்கவில்லையோ, ஒருவர் குணத்தோடு மற்றொருவர் குணமொவ்வாது பட்டதாக ஆகி விடுகின்றதோ, ஒருவர் செய்கையோடு மற்றொருவர் செய்கை முரண்பட்டு விடுகின்றதோ அப்பொழுது அவர்கள் பேருக்காக மட்டும் கணவன் மனைவிகளாக இருந்து வாழ்க்கை நடத்துவதில் என்ன பயனிருக்கிறது? அத்தகைய வாழ்க்கையைக் காட்டிலும் எவர் விரும்பினாலும் அவர் தமது மண ஒப்பந்தத்தை நீக்கிக் கொண்டு மகிழ்ச்சியான வாழ்க்கை நடத்த முற்படுவதில் சிறிதும் தவறோ, நீதியற்ற தன்மையோ இருப்பதாகப் பகுத்தறிவுடைய எவரும் கூற மாட்டார்கள்.

ஒரு சமயம் ஔவையார் எனும் தமிழ்ப் பெரும் புலவராகிய பெண்மணியார், தனது மனைவியின் குணம் பிடிக்காமல் இல்லற வாழ்க்கையில் துன்பப் பட்டுக் கொண்டிருந்த ஒருவனை நோக்கி "பர்தாவுக் கேற்ற பதிவிரதை புண்டானால், எத்தாலும் கூடி இருக்கலாம்—சற்றேனும், ஏறு மாறுக இருப்பாளேயாமாயின், கூறுமல் சன்யாசங் கொள்" என்று புத்தி கூறியதாக ஒரு பாடலும் வழங்குகின்றது. இப்பாடலை உண்மையாக நம்புகின்றவர்களும், பண்டிதர்களும் கூட இந்த மண ஒப்பந்தத்தை நீக்கத்தை ஒப்புக்கொள்வார்களா என்பதில் ஐயமில்லை. ஒவ்வையார் ஆண்களுக்கு மாத்திரம் இப்பாடலைக் கூறினார்; ஆனால் நமது இயக்கம் பெண்களுக்கும் இத்தகைய உரிமையைத் தாராளமாக வழங்குகின்றது என்ற செய்தியையும் இவ்விடயத்தில் நினைப்பூட்ட விரும்புகின்றோம்.

ஆகையால், தோழர் பொன்னம்பலனார் அவர்கள், தைரியமாகத் தனது மனச்சான்று விரும்பியபடி உலகினர் அறியும்படி தமது மண ஒப்பந்தத்தை நீக்கிக் கொண்ட செயலை மீண்டும் நீதியான செயலென்றே, சற்றேகப் படுகின்றவர்களுக்குத் தெரிவிக்க விரும்புகின்றோம். இது பற்றி நமது எதிரிகள் அவதூறு விளம்பரம் புரிவார்களானால், அதைக் கேட்டு ஏமாறுமலிருக்குமாறும் எச்சரிக்கை செய்கின்றோம்.

S. C.

(9-ம் பக்கத் தொடர்ச்சி)

நமது சட்டசபையில் ஓர் தீர்மானம் கொண்டு வருவார்களேயானால் ஆயிரக்கணக்கான துன்மார்க்கிகளின் கொட்டம் அடங்க வழியுண்டாகும் அவ்விதம் செய்ய ஜனசமூகம் பலமானகிளர்ச்சிசெய்ய வேண்டும் போலும்.

சென்னையும்,—சிங்கப்பூரும்.

சென்னை கார்பரேஷனில் மதப்பிரசங்கத்திற்கு, ஆக்க மளிக்கப்படுவதும், மதத்தலைவர்களுக்கு வரவேற்பு அளிக்கப்படுவதும் சர்வசாதாரணமாகிவிட்டது. ஆனால் சென்னை கார்பரேஷனுக்கு சிங்கப்பூரை ஞாபகமூட்டுகிறோம்.

நகர பிச்சைக்காரர்சட்டப்படி, நகரில், நாமம் போட்டுக் கொண்டோ, மதச்சின்னங்கள் அணிந்து கொண்டோ பிச்சை எடுத்தால், மதப்பிரார்த்தனை என்ற சோம்பேரி பித்தலாட்டத்தனமான செய்கையை செய்தால் உடனே அவர்கள் குற்றஞ் சாட்டப்பட்டு விசாரிக்கப் படுகிறார்களாம், இதைநமது சென்னைகார்பரேஷனில் கவனித்தால் நலமாக இருக்கும். ஆனால் பக்தர்கள் மிஞ்சிய கார்ப்பரேஷன் இதையா? கவனிக்கும்.

நாகை சுயமரியாதை சங்கம்

18—4—32 தேதி மாலை 6 மணிக்கு இவ்வூர் கொடி மரத்து மேடையில் அங்கத்தினர்கள் பொதுக் கூட்டம் தோழர் எஸ். முருகையர் அவர்கள் தலைமையில் கூடியது.

தலைவர் முகவுரைக்குப் பின் பொதுக்காரியதரிசி எஸ். பி. கிருஷ்ணன் அவர்களால் சங்கத்தின் வருடாந்திர அறிக்கை வாசிக்கப்பட்டபின் கீழ்க்கண்ட தோழர்களை இப்புதிய வருஷத்திற்கு நிர்வாகஸ்தர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டது.

தோழர் எஸ். பி. கிருஷ்ணன் தலைவர் அண்டு பொக்கிஷதார் எம். ருத்திராபதி உபதலைவர் கே. முருகேசன் காரியதரிசி தோழர்கள் முருகையா; ஆர். வி. கோபால், எஸ். முருகையா சிவஞானம், எல். வெங்கிடுசாமி பி. காயாரோகணம் அப்பாதுரை, ஏ. சாரங்கபாணி, டி. பெருமாள் ஏ. தங்கவேலு, எம். ரெங்கசாமி, வெங்கிடாசலம், எம். முருகையா, எஸ். நாராயணசாமி, வி. சாமிநான் இவர்களை நிர்வாக அங்கத்தினர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்ட பின் தலைவர் அவர்களால் முடிவுரை கூறப்பட்டு கூட்டம் இனிது முடிவுற்ற தென ஒரு நிருபர் எழுதுகிறார்.

விவாக ஒப்புந்தரத்து.

"புதுவை முரசு" ஆசிரியர் பூவாளூர், தோழர், அ. பொன்னம்பலம் அவர்கட்கும், பிறையாறு, திருமதி, ரா. சுலோசனை அவர்கட்கும் 24-5-31 உறப்பட்டவிவாக ஒப்பந்தப்படிவாழ்க்கை நடத்தி வருகையில் தோழர் அ. பொன்னம்பலம் அவர்களின் வாழ்க்கை முறைக்குத் திருமதி, சுலோசனை அவர்கள் ஒத்துவர முயலாததோடு, குணஞ்செயல்களில் வேறுபட்டதன் காரணத்தால் 8-4-32ல் இருவர்மனராசியிலும், பல தோழர்கள் முன்பாகவும் மேற்படி விவாக ஒப்பந்தத்தை ரத்துச்செய்து கொண்டார்கள். அதன் மேலும், உடைமை, பணம் இவைகளிலும் இருவர்க்கும் எவ்விதத் தொடர்பும் இல்லாதவகை செய்து கொள்ளப்பட்டது.

சேலம் ஜில்லா

சுயமரியாதைமகாநாடு

மே-மீ 7, 8-ம் தேதிகளில் நடைபெறும்.

தலைவர்.

தோழர். M. சிங்காரவேலு B. A., B. L.,

திறப்பாளர்.

தோழர். A. V. முத்தையா B. A., B. L.,

பிரஞ்சிந்திய அமைச்சர்.

பெண்கள் மகாநாடு.

தலைவர்.

தோழர். S. நீலாவதி.

திறப்பாளர்.

தோழர். R. அன்னபூரணி.

சேனட் அங்கத்தினர்.

சிவகங்கை. தோழர். S. ராமச்சந்திரன் B. A., B. L., சுயமரியாதைத் தலைவர். E. V. ராமசாமியின் படத்தை திறந்துவைப்பார்.

தோழர்களான ஊ. பு. அ. சௌந்திரபாண்டியன், எம். எல். சி., தோழர் வி. வி. ராமசாமி, விருதை நகராண்மைத் தலைவர், தோழர் எஸ். முருகப்பா—மரகதவல்லி அம்மாள் "சண்டமாருதம்" ஆசிரியர், கி. ஆ. பெ. விஸ்வநாதம், சிவராஜ் எம்.எல்.சி., இந்திராணிபாலசுப்பிரமணியம், புரொபசர் பி. லெக்ஷ்மிநரசு, "திராவிடன்" ஆசிரியர் டி. வி. சுப்பிரமணியம், டி. தர்மலிங்கம் எம். எல். சி., குருசாமி பி. ஏ., குஞ்சிதம் பி. ஏ., "சிட்டிசன்" ஆசிரியர்கள் டி. வி. சோமசுந்தரம் பி. ஏ., பி. எல்., கே. எம். பாலசுப்பிரமணியம் பி. ஏ., பி. எல். ராமசுப்பிரமணியம். எ. ஆர். சிவானந்தம், எ. ரத்தினசபாபதி, சிவகாமி-சிதம்பரனார், சுந்தரி-அருணகிரி, விசாலாட்சி-சுப்பையா, "புதுவை முரசு" ஆசிரியர் அ. பொன்னம்பலம், மற்றும் நமதியக்கத்தலைவர்கள் பலரும் வருவார்களென எதிர்பார்க்கப்படுகிறது.

காரியதரிசிகள்.

எஸ். சி. ரேங்கசாமி

சித்தையன்

கோசலம்.

இங்ஙனம்

வரவேற்புக்கமிட்டியார்

செவ்வாய்பேட்டை,

சேலம்.

Library's copy lacks p. 9-12.

தீண்டா தாருக்குச் சமத்துவம்

பாரிஸ்டர் சாவர்காரின் அரியபவேலை.

சென்ற வாரத்தில் ரத்தினகிரி பதீதாவன மந்திரத்தில்ஜில்லா அருந்ததீயக் கழகத்தின் ஆதரவில் அருந்ததீயர்களின் மகாநாடொன்று நடந்தது. சென்ற ஆருண்டு களாகத் தீண்டாமை ஒழிவுக்கு அல்லும் பகலும் உழைத்துவரும் டாக்டர் சிந்தே தலைமை வகித்தார். ஜில்லாவின் பல பாகங்களிலிருந்தும் சுமார் 900 அருந்ததீயர்கள் வந்து குழுமியிருந்தார்கள். அப்பொழுது பாரிஸ்டர் சாவர்கார் எழுந்து பேசியதாவது:-

"ரத்தனகிரியில் உங்களின் கோரிக்கைகள் அனேத்தும் திருப்தி செய்யப்பட்டு விட்டன. வென்றே சொல்லலாம். மற்ற சாதியினருடன் இன்றுநீங்களும் கல்விக்கழகங்கள், கடைகள், பொதுக்கூட்டங்கள் முதலியவற்றிகுச் சென்ற யாதொரு ஷவித்தியாசமும் மின்றிக்கலந்து கொண்டுவருகிறீர்கள். வித்தோபா ஆலயம் பதீதபாவன மந்திரம் முதலியவற்றிற்கும் நீங்கள் சென்று வேதமோதியும் கீதை பாராயணம் செய்தும் தெய்வத்தை வழிபட்டு வருவதுடன் உயர் சாதியினருடன் சமபந்தியில் வித்தியாசமின்றி உணவருந்தியும் வருகின்றீர்கள். தூரப்பிரதேசங்களிலிருந்து வந்திருப்பவர் களும், இது வரை இங்கு வாராதிருந்து இப்பொழுது வந்திருப்பவர்களும் இதன் உண்மையை அறிய வேண்டுவது அவசியமாகையால் உங்களில் ஐவர் எழுந்து இவ்வாலயத்தின் கர்ப்பக்கிரகத்தினுட் சென்றுதெய்வத்தைத் தனியே வழிபட வேண்டுகிறன்" என்றார். உடனே ஐந்து தீண்டப்படாத தலைவர்கள் சில பிராமணர்களுடனும் க்ஷத்திரியர் களுடனும் கர்ப்பக்கிரகத்திலுள் நுழைந்து தெய்வத்தை ஆராத்தித்தார்கள். வேதத்தைத தீண்டாதவரும் ஓதலாமென்பதைத் தெரிவிக்க ஒரு அருந்ததியச் சிறுவன் காயத்திரி மகா மந்திரத்தையும் சிலபகவத் கீதைச் சுலோகங்களையும் இன்னிசையில் பாடினான்.

நிறை வேறிய தீர்மானங்கள், மகாநாட்டில், குளங்கள், கிணறுகள் கல்விச்சாலைகள், நீதி மன்றங்கள்முதலிய பொது ஸ்தலங்களின் விஷயத்தில் தங்களுக்கும் உரிமை அளிக்க வேண்டு மென்றும், தீண்டாமையைக் கண்டித்தும், தீண்டப்படாத சாதியிலேயே இருக்கும் தீண்டாமையைக் கண்டித்தும், சாதிப்பாகுபாடே இக்கோளாறு களுக்குக் காரணமானதால் சாதிப் பிரிவை அடியுடன் ஒழிக்க வேண்டுமென்றும், தங்களின் வாழ்க்கை நிலைமையுயர்ந்த்த வேண்டு மென்றும் தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன. சோலப்கார் யாதவர் முதலிய தலைவர்களைத் கொண்ட அருந்ததியர்களின் நிர்வாகக் கூட்டமொன்றை நியமித்து அவர்கள் ஒவ்வொரு கிராமத்திற்கும் சென்று தீண்டாமையின் இழிவை போக்கப் பிரசாரம் செய்ய வேண்டு மென்றும் கூறி மகாநாடு இனிது கலைந்தது.

வடஆற்காடு ஜில்லா ஆதிதிராவிடர் மகாநாடு

28, 29 5 32 சனி ஞாயிறு தேதிகளில் மேற்படி மகாநாடு "பள்ளிகாண்டையில்" கூடப்படும்.

ராவ்பகதூர். ஆர். சீனிவாசன் எம், எல், சி, அவர்கள் தலைமை வகிப்பார். எனஒருநிருபர்எழுதுகிறார்.

திருப்பூர் மு. மு. கோர்ட்டு.

1932 வது O. P. No. 8.

பல்லடம் தாலூக்கா கோடங்கி பாளையம் கிராமம் கஸ்பாவிலிருக்கும் சின்னியப்ப கவுண்டன் பெண்ஜாதி தங்கம்மாள்---மனுதாரி.

ஷை பூரிலிருக்கும் நஞ்சப்ப கவுண்டன் மகன் மாரப்ப கவுண்டன் 1, ஷையூர் ஷை மாரப்பகவுண்டன் மக்கள் ராமசாமிக்கவுண்டன் 2, பழனிக்கவுண்டன் 3 ---எதிர்மனுதார்கள்.

ஷை நெம்பரில் மனுதாரியான வள் தன்னுடைய புருஷன் சின்னியப்பகவுண்டன் சொத்துக்களைக்குறித்தும் அவனுக்குவரப்பட்ட நிலுவைகளைக்குறித்தும் தனக்கு பாத்திய சர்ட்டிபிகேட்டு கிடைக்கவேணுமாய் மனுக்கொடுத்து அது நோட்டீஸ் வாய்தா 10-5-32 தேதிபோட்டிருக்கிறது. அதனால் ஷை மனுவிஷயமாய் ஏதாவது ஆக்ஷேபணையிருந்தால் ஷை தேதியில் கோர்ட்டில் வந்து தெரிவித்துக்கொள்ளவேண்டியது. தவறினால் ஒருதலையாய் தீர்மானம் செய்து விடுவார்கள் என்கிற விவரம் அறியவும்.

(Sd) G. ஏசுரத்தினம் B.A. B. L.
நிருப்பூர், மனுதாரிவக்கீல்.
21—4—32.

LEPROSY, LEUCODERMA, PATCHES SYPHILITIC ERUPTIONS, ECZEMA, etc.

No Matter Hereditary or self-acquired. No risk of injection. Cured absolutely. For particulars please write with detailed descriptions of the disease in English.

Post Box No. 11413,
Calcutta.

திருப்பூர் மு. மு. கோர்ட்டு.

O. S. No 810 of 1925.
E. P. R. No. 2590 of 1931.

மு. ராம. அரு. நடேசன் செட்டியார்—வாதி.

பல்லடம் தாலூக்கா சாமளாபுரம் கிராமம் பெருமாம் பாளையத்திலிருக்கும் கவுண்டப்ப கவுண்டன் மகன் சின்ன முத்துசாமிக் கவுண்டன் 1. ஷை தாலூக்கா பூமலூர் கிராமம் மேட்டு பாளையத்திலிருக்கும் சின்ன முத்து சாமிக் கவுண்டன் மூத்ததாரத்தின் மகன் மைனர் ராமசாமிக் கவுண்டன் 2. கார்டியன் தாயார் பழனியம்மாள் ஷை பெருமாம் பாளையத்திலிருக்கும் சின்ன முத்துசாமிக் கவுண்டன் இளைய தாரத்தின் மக்கள் மைனர் மாரப்ப கவுண்டன் 3. மைனர் முத்துக்கு மாரகவுண்டன் 4, மைனர் கவுண்டப்ப கவுண்டன் 5மைனர் ராமசாமி கவுண்டன் 6 கார்டியன் தாயார் மொட்டையக்காள்.—பிரதிவாதிகள்.

ஷை 1. முதல் 6 வரை பிரதிவாதிகளுக்கு.

1925 வது O. S. No. 810 வது நெம்பர் வியாஜியத்திலே பிரப்பிவிக்கப்பட்ட டிக்ரியானது ஷை வாதி என்பவர் அந்த டிக்ரியை நிறைவேற்றுவதற்காக இந்த கோர்ட்டில் மனு செய்து கொண்டிருக்கிறபடியால் ஷை டிக்ரியை நிறை வேற்றும்படி ஏன் கட்டளை கொடுக்கக் கூடாதோ அதற்கு காரணத்தை தெரிவிப்பதற்கும் ஷை நெம்பரில் உடன் ஜப்தி செய்யப்பட்ட சொத்துக்களை வாதி என்பவர் விறபனைக்காக மனுச் செய்து கொண்டிருக்கிறபடியால், விற்பனை இஸ்தியாரின் ஷரத்துக்களை நிர்ணயிப்பதற்காக 1932 வது மே மீ 9 தேதி நிஷ்கர்ஷை செய்யப் பட்டிருக்கிறதென்று இதனால் உமக்கு தெரிவிக்கலாகிறது ஷை தேதியில் ஆஜராகத் தவறினால் ஒரு தலைப்பட்சமாக தீர்மானிக்கப்படும்.

(Sd) M. K. Govindarajulu Chettiar.
Advocate, for D. H.
Tirupur, I—4—32.

ANANGARANGA BATIKA.

Safe and sure remedy against SEXUAL DISABILITY & IMPOTENCY. Increase RETAINTIVE POWER and insure PLEASURE FOR ONE HOUR. Even an OLD ONE CAN FULLY ENJOY THE HEAVENLY BLISS derived from sexual inter course. COMPLETE SATISFACTION guaranteed. Money will be refunded in case of failure Price for 40 Pills Rs. 5 only Sample Phial of 20 Pills Rs 3 only. Please write in English To,
SAILASRAM (K)
Chandanpur (Khulna)
E. B. R.

தமிழ் நாட்டு பெற்றோர்களே!
முந்துங்கள்! முந்துங்கள்!!
மெட்ரிக்குலேஷன்
அறிவை
தங்கள் பிள்ளைகள் நேரில் படித்துப் பெற சந்தர்ப்பமில்லாவிடில் தொழில் செய்து கொண்டே தபால் மூலம் ஸ்பெஷல் மெட்ரிக்கோர்ஸ்களை வாசித்து முடிக்கலாம். இஷ்டப்படின் சர்க்கார் கே. சீனியர் பரீக்ஷை பாஸாகி காலேஜில் சேரலாம். லோயர், ஹையர் கிரேட் உபாத்திமார்களுக்கு அதிக பிரயோஜனமானது. விபரத்திற்கு ஸ்டாம் பனுப்பவும்.
டைரக்டர்,
அன்பையன்ஸ் கேம்பிரிட்ஜ் இன்ஸ்டிடியூட்,
(தலைமை ஆபீஸ்) ஆறுமுகநேரி S. I. R.

தக்ளி ஊர்வலங்கள் எங்கே?
உப்புக்குவியல்கள் எங்கே?

சமதர்மப்போர் துவக்க சற்றும் தயங்காதீர்.

(கோ. ஷண்முகசுந்தரம்)

உலகின் ஒவ்வோர் பகுதியிலும் மனித வாக்கத்தின் பால் நின்றெழும், சுதந்தர வொழி வீறிட்டு வான்முகட்டைப் பிளக்கின்றன. எத்திசை நோக்கினும் "அடிமை விலங்கை அகற்று" என்ற ஆர்வ மொழிகள் செவிகளில் செவிடுபட்டொலிக்கின்றன. ஒரு புறம் "சமதர்ம" அறிக்கை, "உலக சுக பேர்கம் ஒவ்வொருவருக்கும் சமமே" என்ற வீரத்தொனி விண்ணைத் தாக்குகின்றன. மற்றும் இயற்கை உணர்ச்சியானது மக்களின் பாலுள்ள அறியாமை என்னும் இருளை அகற்றிக் கொண்டு வருகின்றன. ஆலை இந்தியில் பொன்னுடென்றும், புண்ணிய நாடென்றும், போற்றித்துதிக்கும், நமது தாய் நாடாகிய இந்தியாவை நோக்குங்கால் சமதர்ம இயக்கத்தின் மீது ஆர்வமுள்ள எம்போன்றார்க்கு இரத்தம் கொதிக்கின்றது. மனம் பதறுகிறது, மெய் சோற்வுறுகிறது. ஆ! என்ன அறியாமை! என்னே யறியாமலேயான் தற்புகழ்ச்சி செய்து கொள்ள துணிந்து விட்டேன். அறிவிலும் அனுபவத்திலும் சிறியேனுதலால் உணர்ச்சியை அடக்கத்திறனின்றி அவ்வாறு என்னைத் தூண்டி விட்டன போலும். நாட்டின் மக்கள் நிலை மிக மிக, மோசமானதும், நிலை கலங்கி உயிர்வற்று, உணர்வற்று இத்திரப்பதுமைபோல், அசைவற்று நிற்பதுடன், மற்ற நாட்டினர் முன்னிலையில் நாங்களும் சுதந்திர நாட்டினர் தான், நாங்களும் பகுத்தறிவுள்ள மனித வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள் தான் என சொல்லிக் கொளவும், உலக அபிவிர்த்தியில் நாமும் அவர்களுடன் போட்டி போடவும், யோக்கியதையற்ற நிலையிலேயே தான் இருந்து வருகிறோ மென்பதை யார் முன் வந்து மறுக்கக் கூடுமெனக் கேட்கிறேன். ஆனால், அவதார புருடர்கள், கற்புக்கரசிகள், வள்ளுவன், கம்பன், காளிதாசன், முதலானோர் தோன்றிய இந்நாட்டில் அதுவும் குறிப்பாகத் தென்னாட்டில் கடவுளை நினைந்து, கசிந்துருகி தாரை தாரையாகக் கண்ணீர்விட்டுப் பேரின்பரஸத்தைப் பருகும், பக்த கோடிகளின், கோஷ்டி ஒரு புறமும், திண்ட நிதிக் குவியல் படைத்த தனவந்தர்கள், மென்மேலும் ஏழை எளியோர்கள், (ஆலையில் கருப்பங் கழியைச் சாறு பிழிவது போல) நசுக்கித் துன்புறுத்தி, ஆனந்தமாகத் தம் வாழ்வை நடாத்தி, இன்ப வெள்ளத்தில் மிதந்து கொண்டிருப்போ ரின் கோஷ்டி மற்றொரு புறமும், ஓநாயைப் போன்று முதுகுடன் ஒட்டிய வயிரோடு, வாடி வதங்கி நின்று தம் மானத்தைக் காப்பதன் நிமித்தம் கிழிந்த கந்தைக்கும், கால்வயிற்றுக் கஞ்சிக்கும் வகையில்லையே என்று இடறி விழும் ஏழை மக்களின் பரிதாபக்காட்சி இன்னொரு புறமும், தேசியத்திலகங்க ளெனவும், வீரர்க ளெனவும், சிலர். 'உயிர்விட நேரிடினும் ஆதித்திராவிடர்கட்குத் தனித் தொகுதி நல்கே'னென் வைராக்கிய சபதம் செய்து மார்தட்டி கர்ஜிக்கும் அவதாரபுருடர்களும் அவர் தம் சகாக்களும் பழனி விபூதி உசிதமா? திருச் செந்தூர் விபூதி மேன்மையா? எனவும் ஐந்து முக உத்திராட்சம் விசேடமா? ஆறுமுக உத்திராட்சம் சிலாக்கியமா? குற்றாலம் நீரருவி மேன்மையா? காசிக்கங்கையில் தீர்த்தமாடுவது சிலாக்கியமா? எனவும் பகவத்கீதையை ஆங்கிலத்தில் மொழி பெயர்ப்பது மேன்மையா? அல்லவா? எனவும் பைபிளின் பத்துக் கற்பனையை, உணர்ந்து அதன் பொருளை அறிந்து ஆனந்திக்க வகை தெரியாதவர்கள் தான், எம்மதத்தைத் தூஷிப்பார்களென்போர்களாகிய, கிறிஸ்துவ சகோதரர்களும், இரண்டு அங்குல முள்ள தாடி மேன்மையா? நான்கு அங்குலமுள்ள தாடி சிலாக்கியமா எனவும் குர் ஆனை அன்னிய பாஷையில் மொழிபெயர்த்தால், ஆண்டவனுக்குக் கோபம் வந்து விடும் என் போரும் காலமாறுபாட்டிற்குத் தக்கபடி சட்டதிட்டங்களைத் திருத்தியமைக்க வேண்டாமா? என்றுலோ வந்து விட்டது கோபம், உடனே நீ காபீர் என ஆத்திரத்துடன் விடை பகரும் முல்லாக் கோஷ்டி நிறைந்த முஸ்லீம் சகோதரர்களும் மற்றும் பற்பல விதமாக தத்துவ ஆராய்ச்சி செய்யும் நிபுணர்களடங்கிய கோஷ்டி ஒரு புறமும், சாஸ்திரம் பொய் என்றால் சாஸ்திரத்தைப் பார். அதுவும் பொய் என்றால் அருகம் புல்லைப்பார் என சாட்சி மெய்பித்துக்காட்டி சந்தோஷமடையும் விவேகா சிரோன்மணிகளின் கோஷ்டி இன்னொரு புறமும் இவை போன்ற இன்னும் அனந்த ஊழல்களாக தெய்வீக சக்தியிலேற்படுத்தப் பட்ட தென்று பெருமையுறும் நமது "புண்ணிய" நாட்டில் நாம் தினமும் கண்கூடாகக் காண்கின்றோமா? அல்லவா? என்பதும் நேயர்கள் அறிந்ததே. இதிவ்வாறிருக்க, காலசக்கரம் சுழலும் வேகத்திற்கும், இந்நாட்டு மக்கள் மேற்குறிப்பிட்டுள்ள விடயங்களில், செய்யும் ஆராய்ச்சிக்கும், மற்ற நாடுகள் குங்கள், மூட நம்பிக்கைகளைப் புகுத்தி அடைந்து கொண்டு போகும் முற் றும்படியானதும், சாக்கடை நாற்றத்தைப் போக்கிற்கும், வாசகர்களாகிய நீங்கள் திற்கு சமமானதுமான செல்லரித்த மதப்பேயை ஜெர்மன் குண்டால் ஏடுகளைத் தீக்கிரையாக்குங்கள், அன்அடித்துடைத் தெறிந்து விட்டு பகுத் றே அறிவு ஜோதி தாண்டவமாடும், தறிவு என்னும் சாணைக்கல்லில் உங் அந்நான் இந்திய நாடு பொன்னுடாய்த் களது மத ஆதாரத்தை உரையுங்கள் திகழும்.

பின்பு அவற்றை பரிசீலனை செய்து, பாருங்கள் இந்திய நாட்டுத் தெய்வீகத் தன்மையின் யோக்கியதை உங்களுக்கு விளங்காமற் போகாது. இந்நிலையிருக்கிற மக்களுக்கு முதலில் விரும்பத்தக்கது சமூக சீர்திருத்தமா? அன்றி சுயராஜ்ஜியமா? என்பதையும் சிந்தித்துப் பாருங்கள் (வருகிற சுயராஜ்ஜியத்தை குறுக்கிட்டு தடுக்க வில்லை, நாமும் வரவேற்கிறோம்.) அப்படி ஒருக்கால் இவர்கள் சுயராஜ்யம் பெற்று விட்டாலும் ஒரு சவால அன்னத்திற்கு நாயுடன் போர்புரியும் ஏழைமக்கள் வதியும் இந்நாட்டில் இரத்தத்துளிகள் சிந்தாமலும் அவர்கள் சீற்றத்திற்கு ஆளாகாமலும், சுய ஆட்சி அமைதியான முறையில், நடத்த முடியுமா என்பதையும், அவ்வாட்சியில் பணக்காரர்க ளென்போரும் உயர்ஜாதிக்காரர்க ளென்போரும் பங்கு பெற முடியுமா என்பதையும் யோசித்துப் பாருங்கள். ஏதோ சிலர் பார்ப்பனராதிக்கத்தை நிலை நிறுத்துவான் வேண்டு (பார்ப்பன) தேசியப் பிரசாரம் செய்து விட்டதினால் மக்கள் ஏமாந்து விடக்கூடுமென் றெண்ணுகிறீர்களா? அக்காலம் மலையேறி விட்டது அவ்வாறின்றி இனிமக்கள் இம்மாதிரி ஏமாறி புராண காலட்சேபங்கட்கும் புண்ணிய தீர்த்தகோவில் கட்கும் செல்ல முடியுமா, என்றும், அவ்வாறு சென்று காலத்தை வீணே கடத்துவார்களே யாகில், உலகப் போக்கில் இவர்கள் எந்த நிலையை அடையக்கூடுமென்பதையும், யோசித்தால் விளங்காமல்போகாது. மேலும் இம்மாதிரியானவர்களுடைய நிலைமையை வெளியிடுங்கால், பார்ப்பனத் துவேஷி, கடவுள் துவேஷி, நாஸ்திகன் போன்ற அலங்காரப் பட்டங்களை நமக்குச் சூட்டிக் களிக்கப் பிரயத்தனப்படுகிறார்கள். என்னே இவர்களின் அறியாமை. சமதர்ம இயக்க என தருமை சகோதர சகோதரிகாள் இனியும் நாம் வாளா உறங்கிக் கொண்டிருக்கலாமா? சமூகத்தொண்டாற்ற முன் வாருங்கள். எமதுபுனித இயக்கக் கொள்கைக்கு முரணுக் நிற்பது கடவுள், மதம், புராணம், இதிகாசம், முன்னோர் ஆசாரம், தேசியம் என்பன போன்ற புரட்டுகளெவையாயருப்பினும் சரியே, அவற்றுடன் அறிவு போர் புரிந்து வெட்டி வீழ்த்துங்கள். மதமெனும் பேயை, ஜெர்மன் குண்டுக்கு இரையாக்குங்கள் பிறப்பினுல் உயர்வு தாழ்வென்னும் பேதத்தையொழியுங்கள். பெண்கட்கு சமத்துவம் பேணுங்கள், ஏழைகளின் இரத்தக்கண்ணீர் மாற இரவு பகலா யுழையுங்கள், ஆண்டவன் நர்த்தனம் செய்யும் ஆலயங்களை அழைத்து ஏழைச் சிறுவர்களின் பள்ளிக்கழகங்களாக

கோவை சுயமரியாதை வாலிபர் சங்கம்.

மேற்படி சங்கத்தின் வாராந்திரக் கூட்டமொன்று 17—4—32 ஞாயிறன்று மாலை 7-மணிக்கு சங்கக்கட்டிடத்தில் சங்கத்தலைவர் தோழர் எ. ஆர். சிவானந்தம் அவர்கள் தலைமையில் கூடியது. தோழர் என். கே. கஸ்தூரியவர்கள் சுயமரியாதை கீதங்கள் பாடினார்.

பின்னர் பி. இரங்கசாமி யவர்கள் பார்ப்பனரல்லாதாரும் சுயமரியாதையும் என்ற பொருள்பற்றிப்பேசினர். அவரை ஆதரித்துத் தோழர் சி. எஸ். கந்தசாமியவர்கள் பேசியபின் அதேயொருள் குறித்து தோழர் ஆர். கிஸன் அவர்கள் சிறிது பேசிவிட்டு 'கோவை பார்ப்பன வக்கீல்களைக் கண்டித்தும் பார்ப்பனரல்லாத வக்கீல்களைப்பாராட்டியும் உள்ள தீர்மானத்தைப் பிரரேபித்துப்பேச அதைத் தோழர் எச். எஸ். முனுசாமி அவர்கள் ஆதரித்துப்பேச அது ஏகமனதாய் நிறைவேறியது. பின்னர் தமிழ்நாடு பத்திரிகையைக் கண்டிக்கும் தீர்மானத்தைத் தோழர் சி. கே. சந்தானம் அவர்கள் பிரேரேபிக்க தோழர்கள் வி. செகப்பண்ணன், என். கே. கஸ்தூரி, வி. சுப்பிரமணியம் ஆகியோர் ஆதரிக்க ஏகமனதாய் நிறைவேறியது.

பின்னர் தலைவர் முடிவுரைக்குப்பின் கூட்டம் இனிது முடிந்தது என ஒரு நிருபர் எழுதுகிறார்.

திருப்பூர் தாலூக்கா ஆதிதிராவிட கிறிஸ்தவர் மகாநாடு.

திருப்பூரை அடுத்த பெருந்துளுவில் 27-4-32ந் தேதி நடைபெறும். கோவை உயர்திரு ஏ. ஆர். சிவானந்தம் அவர்கள் தலைமை வகிப்பார். கோவை உயர்திரு. எஸ். ஏ. மாணிக்கம் அவர்கள் மகாநாட்டைத் திறந்து வைப்பார். கோவை திருவாளர்கள் ஆர். கிஷன், பி. ரங்கசாமி அவர்கள் தனித்தொகுதி, பொதுத் தொகுதியைக்குறித்து உபந்நியாசிப்பார்கள். பல முக்கியமான தீர்மானங்கள்நடைபெறும்.

தாலூக்காவின் பல பாகங்களிலிருந்து அதிகப்படியான பிரதிநிதிகள் வருவார்கள் என்று தெரிகிறது. என மகாநாட்டுக் காரியதரிசிஎழுதுகிறார்.

திருச்சிஜில்லா தீண்டப்படாத கிறிஸ்துவர் மகாநாடு.

திருச்சி ஜில்லா தீண்டப்பட்டாத கிறிஸ்துவர்களின் முதல் மகாநாடு புதன்கிழமை லால்குடியில் கூடிற்று. ஸ்ரீ எம். தேவதாசன எம். எல். சி. தலைமைவகித்தார். பலஇடங்களிலிருந்தும்பிரதிநிதிகளாக சுமார் 2000பேர் கள்வரை வந்திருந்தனர். திருச்சி பிரமுகர்கள் பலரும் விஜயம் செய்திருந்தனர்.

சாமி சகஜானந்தர் எம். எல். சி. மகாநாட்டைத்திறந்து வைத்துப் பேசுகையில் தீண்டாத ஹிந்துக்களும், தீண்டாத கிறிஸ்துவர்களும் பொதுவாக பல கஷ்டங் குறைகளுக்கு ஆளாகியிருக்கிறார்கள் என்றும், தங்கள் குறைகளை நிவர்த்தி செய்து கொள்ள முயலுகையில் இரு மதத்தாரும் மத வித்தியாசத்தைப் பாராட்டாமல் சேர்ந்து உழைக்கவேண்டுமென்றும், இந்திய கிறிஸ்துவர்களுக்கு தனித்தொகுதிகள் ஏற்பட்டும் தீண்டப்பட்டார் அவைகளை அடைய முடியாமலிருக்கிறதென்றும் அவைகளை, மேன்தல கிறிஸ்துவர்களே அடைந்து வருகிறார்களென்றும், கவர்ன்மெண்டார் கொடுக்கும் விசேஷ சௌகரியங்களை தீண்டப்படாத கிறிஸ்துவர்கள் அடைய வேண்டுமாலல் அவர்களை மேன்குல கிறிஸ்துவர்களிலிருந்து பிரித்து தனித்து ஒரு வகுப்பாக வைக்கவேண்டும் அல்லது இந்து ஆதிதிராவிடர்களுடன் சேர்க்கவேண்டும் என்றும் இதற்கு அனுசரணையாக ஷை மகாநாட்டில் தீர்மானங்கள் செய்யப்பட வேண்டுமென்றும் கூறினார்.

வரவேற்பு பிரசங்கம்

உபசரணைக் கமிட்டித்தலைவர் திரு. ஏ. ஆரோக்கியசாமி பேசுகையில் இந்தியக்கிறிஸ்தவத் தொகுதியில் தீண்டப்படாத கிறிஸ்துவர்களைச் சேர்த்தது தவறென்றும் இந்த ஏற்பாட்டில் சர்க்கார் செய்யும் சௌகரியங்களை அடைய முடியாமலிருக்கிறதென்றும், அவர்கள் முன்னடையச் செய்து வரும் முயற்சியில் இனி மேன்குலக் கிறிஸ்துவர்களிடம் நம்பிக்கை வைக்கக் கூடாதென்றும், மத சம்பந்தமான பேச்சுகளால் ஏமாறக்கூடாதென்றும், கல்வியை அடைந்து தங்கள் நிலைமையை விருத்தி செய்துகொள்ள வேண்டுமென்றும் கூறினார்.

கிறிஸ்துவ மதத்தில் தீண்டாமை.

மகாநாட்டுத் தலைவர் திரு. எம். தேவதாஸ் எம். எல். சி. பேசுகையில், கிறிஸ்துவமதத்தில் தீண்டாமைஇருப்பது விசனிக்கத்தக்கதென்றும், தீண்டப்படாத கிறிஸ்துவர்கள் முன்னேற்றமடைய வேண்டுமாலல் அவர்கள் கல்வி வளம் அடைந்து தங்கள் பொருளாதார நிலைமையை விருத்தி செய்து கொள்ள வேண்டுமென்றும், கல்விப்பொருளும் செல்வப்பொருளும் அடைந்து விட்டால் ராஜீயத்துறைகளில் முன்னேறுவது சுலபமென்றும், பெண்களுடைய நிலைமையை விருத்தி செய்வது இன்றியமையாததென்றும் கூறினர்.

பின்னர் பல கனவான்களும் பெண்மணிகளும் சொற்பொழிவு நிகழ்த்தினர். திரு. டி. வி. சோமசுந்தரம் பேசுகையில் தற்போது தீண்டப்படாத கிறிஸ்துவர்கள் பட்டுவரும் கஷ்டங்களை எடுத்துக்கூறி தனி வகுப்பாக இருப்பதால் இன்னவிதம் நன்மைகள் ஏற்படும் என்பதை விளக்கிக்கூறினர். திரு. கே. எஸ் ராமானுஜம் பேசுகையில் பொது விஷயங்களில் பாடுபடுகையில் ஒற்றுமை வேண்டும் என்றும் பிளவு கூடாதென்றும் கூறினர் திருமதி நீலாவதி அம்மாள் பெண்களுடைய நிலைமையைச் சீர்படுத்த வேண்டிய அவசியத்தை வற்புறுத்தினர். கான்பகதூர் பி. காலிபுல்லா 'சமூக முன்னேற்றத்துக்கு கல்வியும், மதுபான விலக்கும் இன்றியமையாதவை' என்பதை நன்கு விளக்கிக்காட்டினர்.

தீர்மானங்கள்.

"தீண்டப்படாத கிறிஸ்தவர்களை இந்தியக் கிறிஸ்துவத் தொகுதியிலிருந்து பிரித்துத்தனித்தொகுதியாக வைக்கவேண்டும். அல்லது ஹிந்து ஆதிதிராவிடர்களுடன் சேர்க்க வேண்டுமென்றும், தனித்தொகுதிப் பிரதிநிதித்துவம் வேண்டுமென்றும், லோதியன் கமிட்டி முன்பு சாட்சியம் சொன்ன சிலர் தீண்டப்படாத கிறிஸ்துவர்கள் சொற்ப தொகையினரென்று கூறியது தவறென்றும் அவர்கள் மொத்தம் கிறிஸ்துவர்களில் 300-க்கு 75 பாகம் இருக்கிறார்கள் என்றும் மேன்குல கிறிஸ்துவர் சங்கம் தங்களுக்கு பிரதிநிதியாகாதென்றும் அவர்களுடைய தீர்மானங்கள் தங்களைக்கட்டுப்படுத்தாதென்றும் தீர்மானங்கள் செய்யப்பட்டன.

வில்லிவாக்கத்தில் சமதர்ம சங்கத்திறப்புவிழா.

17—4—32 மாலை சரியாய் 5 மணிக்கு வில்லிவாக்கம் ரெயில்வே ஸ்டேஷனுக்கு அருகேயுள்ள மைதானத்தில் அமைக்கப்பட்டிருந்த பந்தலில் தாழ்த்தப்பட்டார் மாபெருங்கூட்டம் ஒன்று கூடியது. சுமார் 2000 மக்களுக்கு மேற்பட்ட ஆண்களும் பெண்களும் விஜயம் செய்திருந்தனர். வந்திருந்தவர்களில் முக்கியமானவர்கள், ஆனரபிள் திவான்பகதூர் கோபதி நாராயணசாமி செட்டியார், சைதாப்பேட்டைத் தாலூக்கா போர்டுத் தலைவர், திரு. சண்முகம் பிள்ளை, செங்கல்பட்டு ஜில்லாக் கல்விக்கழகத் தலைவர் திரு. இலஞ்சியம் முதலியார், திராவிடன் ஆசிரியர் திரு. டி. வி. சுப்பிரமணியம், பண்டிதர் திருஞான சம்பந்தர் பண்டிதர் எஸ். எஸ். ஆனந்தம் டாக்டர் வெங்கண்ண தேவர், திருமதி. குஞ்சிதம் திரு. குருசாமி, காரைக்குடி திரு. சுப்பையா திருமதி விசாலாட்சி, திரு ராமநாதன், மிஸ்டர் அண்டு மிஸஸ் நடராஜன், திருமதி புஷ்பக்காந்தம் திருமதி கமலவேணியம்மாள், திரு. ஜானகிராம் ரெட்டியார் முதலிய இன்னும் பலர். முதன் முதலாகத் திராவிடன் ஆசிரியர் திரு. டி. வி. சுப்பிரமணியம் அவர்கள் ஆங்கு குழுமியிருந்த மகாஜனங்களின் வேண்டுகோளின்படி ஒரு இனிய சொற்பொழிவுடன் சமதர்ம சங்கத்தைத் திறந்து வைத்தார். பின்னர் திரு. கோபதி நாராயணசாமி அவர்கள் தலைமை வகிக்கும்படி கேட்டுக்கொள்ளப்பட்டார். அவரது அவைத் தலைமையில், சகோதரி கமலவேணியம்மையாரால், இனிமையான சமதர்மப்பாட்டுகள் பாடப்பட்டன. பின்னர் பண்டிதர் திருஞான சம்பந்தம் அவர்களும், மகா மதுரகவி முருகேச பாகவதர், பண்டிதர் எஸ். எஸ். ஆனந்தர், திரு. வி. பூ. எஸ். மணியர் பண்டிதர் சுப்பிரமணிய ஆச்சாரி, சகோதரி குஞ்சிதம் அம்மையார், திரு. குருசாமி, கோலார் திரு. டேவிட் தொழர் டி. வி. சுப்பிரமணியம் திரு. வரதராஜ பாகவதர் முதலியோர் முறையே பல அருமையான சொற்பொழிவுகள் நிகழ்த்தினர். பண்டிதர் சம்பந்தர் அவர்கள் சமதர்மத்தை விளக்கி, சுயமரியாதைக்கும் சமதர்மத்திற்கு முள்ள சம்பந்தத்தை எடுத்துக் காட்டியதும், தொழர் குருசாமியின் வீரவுரையும் ஆசிரியர் சுப்பிரமணியம் அவர்களின் அருமையான சொற்பொழிவும் சகோதரி குஞ்சிதம் அம்மாள், முதன் முதல்காகத் தமிழில் பேசிய அழகும் சகோதரி கமலவேணியின் சமதர்மப் பொருள்கள் நிறை இனிமையான கீதங்களும் ஈண்டு குறிப்பிடத் தக்கனவாகும். தலைவர் அவர்களின் சுருக்கமான முடிவுரையுடன் இரவு 9 மணிக்கு கூட்டம் இனிது முடிவுற்றது வில்லிவாக்கம் முழுவதுமே ஒரு புதிய உணர்ச்சியும், பரபரப்பும் ஏற்பட்டுள்ளது.

"திராவிடன்"

[5-ம் பக்கத்தொடர்ச்சி]

செய்தால் கமிஷனரும் அதற்குமேல் I. G. P. சட்டை சபை பார்லிமெண்டு மன்னர் சபை இவ்வாறு படிப்படியாக ஒவ்வொருவர் காரியத்தையும் கவனிக்கக் கூட்டங்கள் இருக்கின்றன. இவ்வாறு கண்ணுற்கண்ட காதால் கேட்டவரையிலும் நம்பாமல் அதற்குமேல் கவனிக்கவும் தண்டிக்கவும் ஒரு கடவுள் இருக்கிறாரென்றால் ஏன் அக் கடவுளுக்கு மேல் ஒரு டைரக்டர் கடவுள் இருக்கக் கூடாது. நன்றே யோசித்துப்பாருங்கள்.

ஆகையால் தோழர்களே! வீணாக் கடவுள் தொண்டென்று நமக்குள்ள சொற்ப காலத்தையும் பொருளையும் புத்தியையும் செலவிட்டு நஷ்டமடையாதீர்கள். அந்த நேரத்தையும் பொருளையும் புத்தியையும் ஆராய்ச்சி உலகிலும் மக்கள் தொண்டிலும் அறிவு மார்க்கத்திலும் செலவழியுங்கள். அக்காலத்தில் நாம் ஏன் கடவுளுக்குப் பயப்பட்டு அவருக்கு வணக்கமும் பொருட் செலவும் செய்யவேண்டும். வேண்டவே வேண்டாம். நாம் ஒரு திருட்டுச் செய்திருந்தால் தன்மார்க்கத்தில் ஈடுபட்டிருந்தால் மன்னிப்புக் கேட்போம். பொருளைச் செலுத்தி அந்தக் கடவுள் மனதைச் சாந்திசெய்துகொள்வோம். இத்யாதி தன்மார்க்கக் காரியத்தில் செல்லவும் வேண்டாம். அதற்காக எந்தக் கடவுள் தயவையும் நாம் எதிர்பார்க்க வேண்டாம். நாம் நமக்கு அறிவிருந்தும் இத்தகைய பாவகாரியங்களைச் செய்து சகா ஒரு கடவுளுக்கு என் வேலை கொடுத்துக்கொண்டே இருக்கவேண்டும். பொருமைக்கும் அளவுண்டு அதுபோல் கடவுள் பொருமைக்கும் ஒரு அளவுண்டு. பிறகு அவருக்குக் கோபம் வந்தால் தமது நெற்றிக் கண்ணால் நமது நாட்டை ஒரே பார்வையில் எரித்து மண்ணோடு மண்ணாக்கிவிட்டு அவருக்கு ஒருவித தொந்தரவும் கொடுக்காத ரஷ்யா தேசத்துக்கு சென்று விடுவார். தோழர்களே! நமக்குக் கல்வி கேள்விகளால் கிடைத்த பகுத்தறிவு என்பதொன்று இருக்கின்றன. அவ்வறிவின் துணைகொண்டு சன்மார்க்கவழியில் உலக ஞானத்தை யொட்டி நாமும் நடந்து நமது பின் சந்ததியாரையும் நடத்தப் பழக்குவோமாயின் ஏன் நாம் கடவுளென்ற ஒரு வஸ்துவுக்கு பயப்பட்டு அதற்கெனப் பொருளையும் பொழுதையும் புத்தியையும் வீணாக்கவேண்டும். இவற்றையெல்லாம் நன்கு ஆலோசனை செய்துதான் நமது சுயமரியாதை இயக்கம் கடவுள் தொண்டு மக்கட்கு அவசியமில்லையென்று போதிக்கின்றது.

ஆதிதிராவிடத் தொண்டர்கள் மகாநாடு.

சென்னை மாகாண ஆதிதிராவிட மகாஜன சபையின் உறுப்புக்களாகிய பல சபைகளின் தலைவர்களின் தொண்டர்களின், பிரதிநிதிகளின், (10—4—32) திருக்கோவிலூர் ஆதிதிராவிட மகாநாட்டின் கூட்டுறவின்படி 17—4—32 ஞாயிற்றுக்கிழமை மாலை 6-15 மணிக்கு சென்னை எழும்பூர் ஏரி-மைதானத்தில் மேற்படி மகாநாடு கூட்டப்பட்டது. ஏராளமான பொது ஜனங்களும் சபையின் தலைவர்களும், தொண்டர் படைத் தலைவர், கமாண்டர்கள் தொண்டர்கள் ஏராளமாக விஜயஞ் செய்திருந்தது குறிப்பிடத்தக்கது.

செங்கற்பட்டு ஜில்லா பொன்னேரி ஆதிதிராவிட மகாஜன சபையின் தலைவர் அட்டாவதானம் பூ. மு. வேலாயுதபாணி திரு. பாலகுரு சிவத்தைத்தலைவராக இருக்கும்படி கேட்டுக்கொண்டார். பின் பாலகுரு சிவம் தலைமைவகித்து ஆதிதிராவிடம

க்கள் அனுபவித்துவரும் துன்பங்களையும், டாக்டர் அம்பெட்கார் ஆர். சீனிவாசன் ஆகியவர்கள் வட்டமேஜைமகாநாட்டில் செய்திருக்கும்வேலையைப்பாராட்டியும் திரு. எம். சி. ராஜா அவர்கள் டாக்டர் மூஞ்சேயுடன் செய்துகொண்ட ஒப்பந்தத்தைக்கண்டித்து ஆதிதிராவிடர்களுக்கு தனித்தொகுதியே அவசியமென்றும் இன்னும் பல அரியவிஷயங்களைப்பற்றி பேசினர். பின் திருவாளர்கள் பழனிசாமிபிள்ளை, நடராஜன், சாம்பமூர்த்தி பூ. மு. வேலாயுதபாணி ஆகியவர்கள் பேசினார்கள். தலைவர் முடிவுரைக்குப்பின் கீழ்க்கண்ட தீர்மானம் நிறைவேறியபின் கூட்டம் கலைந்தது

தீர்மானங்கள்.

1. டாக்டர் அம்பேத்கார், ராவ்பகதூர் ஆர், சீனிவாசன் ஆகியவர்கள் கேட்டிருக்கும் தனித்தொகுதியேவேண்டும். இதனை காருண்ய அரசாங்கத்தார் நிலைநாட்ட இம்மகாநாடு கேட்டுக்கொள்ளுகிறது.

2. எங்கள் பிரதிநிதிகள் கேட்டிருக்கும் 10 ஸ்தானங்கள் அவசியம் கொடுத்துத்தீரவேண்டுமென இம்மகாநாடு வற்புறுத்துகிறது.

3, எங்கள் பிரதிநிதிகள் யதாஸ்துப்படி எழுதப்படிக்கத்தெரிந்தவர்களும் 1 ரூபாய் வருமானமுடையவர்களும் தாழ்த்தப்பட்ட வகுப்பினரும் வாக்குரிமையளித்து நலம் பெறச்செய்ய இம்மகாநாடு வற்புறுத்துகிறதென ஒரு நிருபர் எழுதுகிறார்.

நாசிக்சமதர்மப் போர்.

நேற்று கலாராம் கோயிலுக்கருகில் அலைந்து கொண்டிருந்ததற்காக மொத்தம் 34 பேர் கைதுசெய்யப்பட்டனர். இவர்களில் 13 பேர் மஹார் வகுப்பு ஆண் பிள்ளைகள். ஒருவர் பிராம்மணர். மஹார் வகுப்பு ஸ்திரீகள் 19-பேர் சனாதன தர்மிகள் இருவர். மஹார் வகுப்பினர் தங்கள் ஸ்திரீகளைக்குழந்தைகளுடன் அனுப்பிக் கோயிலுக்குள் செல்லும்படிச் சொன்னார்கள். அவர்களைத் தடுத்ததால் அவர்கள் தொந்தரவு கொடுத்தார்கள். 16-1-32ந்தேதி கோயில் கதவுகள் மூடப்பட்டன. 4. மணி வரை மூடப்பட்டே யிருந்தன. கதவுத் திறந்தவுடனே மஹார் வகுப்பினர் பலர் அங்கு வந்து உள்ளே நுழையப்பார்த்தனர். ஆலில்தொங்குதாவு நேராமலிருக்க உடனே கதவுகள் மூடப்பட்டன. நாளை ரதோற்சவம் நடக்க விருப்பதால் ஏதாவது கஷ்டம் நேரிடக்கூடுமென எதிர் பார்க்கப்படுகிறது. மஹார்கள் தாங்களும் வந்து ரதத்தை இழுக்க விரும்புவதால் போலீஸார் ரதோற்சவத்தையே நிறுத்திச் சூத்தனிகளுக்கும், அவர்களுக்கும் தகராறு நேராமலிருக்க வழி தேடும்படிக் கோயில் அதிகாரிகளுக்குச் சொல்லி வருகின்றனர்.

ஆலயத்துக்குள் பிரவேசிக்க மஹார்கள் முயற்சித்தபோது சூத்தனிகளுக்கும், மஹார்களுக்கும் நடந்த சச்சரவாலும் கல்லெறிபட்டதாலும் ஒரு வருக்குப் பலத்தகாயம் பட்டது. மற்றொருவருக்குச் சொற்பக்காயம் பட்டது. 11-மணிவரை கலவரம் ஒன்றும் நடைபெறாமலிருந்தது. அதன் பிறகு மஹார்கள் இரண்டிடங்களில் ஜாதி ஹிந்துக்களைத்தாக்கிய தால் கலவரம் ஆரம்பமாயிற்று. போலீஸார் உடனே அங்குசென்று அமைதியை நிலைநிறுத்தினர். மஹார் வகுப்பினர் 16 பேர் கைது செய்யப்பட்டனர். இன்று காலை கோயில் கதவு திறக்கப்படாமலிருந்தும் மஹார் வகுப்பினர் கோயிலைச்சுற்றி நின்று கொண்டிருந்தனர். நகரெங்கும்போலீஸார் பந்தோபஸ்துக்கு நிறுத்தி வைக்கப்பட்டிருக்கின்றனர். நாசிக் ராணுவ விடுதிபோலிருக்கிறது. (சு. மி)

கோவையில் சட்டமெம்பர்.

சட்டமெம்பர் சர். எம். கிருஷ்ணன் நாயர் நீலகிரி எக்ஸ்பிரஸில் வந்தார். அவர் சிறப்பாக வரவேற்கப்பட்டார். பல லாயர்களும், நீதி இலாகா உத்தியோகஸ்தர்களும், ஜில்லா ஜட்ஜி கலெக்டர் போலீஸ் சூபரின்டெண்டு முதலியவர்களும், ஸ்ரீமான்கள் ரத்தினசபாபதி முதலியார், ராமலிங்கம் செட்டியார், பி. ராமலிங்கம், சி. கே. மத்தாய் முதலியவர்களும் ரயில்வே ஸ்டேஷனில் பாண்டுமேளம் முதலியவற்றுடன் அவரை வரவேற்றனர். ரயிலிலிருந்து எஸ். என் பொன்னையா கவுண்டர், எம். வேணுகோபால்பிள்ளை முதலியவர்கள் அவருக்கு மாலை போட்டனர். பிறகு சட்டமெம்பர் முன்னுல் யானையுடன் பல மோட்டார்கள் பின் தொடர ஊர்வலமாக அழைத்துச்செல்லப்பட்டார். மாலை முனிசிபாலிட்டியும், இந்திய வர்த்தக சங்கமும் அவருக்கு உபசாரப்பத்திரமளித்தன. ஜில்லாபோர்டு தலைவர் ஸ்ரீமான் ரத்தினசபாபதி முதலியாரின் உருவப்படத்தைத் திறந்துவைத்தார் தோட்டக்கச்சேரி நடந்தது.

கோலார் தங்கவயல்.

சுயமரியாதை தமிழ் வாலிபசங்கம்

14—4—32 தேதி சனிக்கிழமையன்று மாலை 5-30 மணிக்கு உரிகம் பி. பிளாக் டிரைவர் லென் சுயமரியாதை தமிழ் வாலிப சங்கத்தினரால் அமைக்கப்பட்டிருந்த அழகிய பந்தலின் கண் ஓர் பொதுக் கூட்டம் நடைபெற்றது. சுமார் 500 பேர் பெண்களும், ஆண்களுமாக குழுமியிருந்தனர். குறித்த நேரத்தில் சுயமரியாதைச் சங்க சிறுமியர்களால் சுயமரியாதைக்கீதம் பாடியபின்னர் சங்க அங்கத்தவர்களிலொருவரால் தமிழன் ஆசிரியர் அவர்களின் திருமகள் திரு. அன்னப்பூரணியம்மையாரைத் தலைவராகத் தேர்ந் தெடுக்கப்பட்டனர், அது பேரது உயர்திரு அ. இராகவன் சபாபதி அவர்கள் 'சுயமரியாதை' என்பதைப் பற்றிப் பேசினர். பின் நாயனரும், தமிழன்' பத்திரிகையின் ஆசிரியருமாகிய உயர்திரு ஜி. அப்பாதுரையார், இந்திய மக்களின் எதிர்கால வாழ்வைப் பாழ்படுத்த காங்கிரஸ் உருக்கொண்டுள்ள பார்ப்பனீய மதக் கோட்டையின் புரட்டுகளையும், கங்கையாத்திரையின் அநியாய அட்டூழியங்களையும் வெளிப்படுத்தி மக்கள் மனத்தே பதிந்துள்ள மயக்கத்தைப் போக்கி இவ்விருபதாம் நூற்றாண்டிலே சுதந்திரம், சுயமரியாதை பெற்று முன்னடைய வேண்டுமானால் வாலிபர்களின் முயற்சியே அவசியமாயிருக்கிறதென்ற கருத்தோடு சொற்பொழிவாற்றிய பின் தலைவர் முடிவுரையாக மாதர் முன்னேற்றத்தையும், பேய் பிசாசு முதலிய அர்த்தமற்ற வார்த்தைகளையுப்பயோகிப்பதாலுண்டாகும் கேடுகளையும் விளக்கி, தேயத்தில் ஜாதி மதங்களொழித்து சமதர்மம் அடைந்தாலொழிய, முன்னேற்றத்திற்கு வழியில்லையென பல அறிய விஷயங்களை அழகாகப்பேசிய பின்னர், ஷேசங்கத்திலொருவரால் சங்கத்தின் சார்பாக பல பெரியார்களுக்கு நன்றி கூறலோடு பூவாரம் சூட்டப்பெற்று கூட்டம் 7-30 மணிக்கு இனிது கலைந்தது, தலைவர்களுக்கு தேனீர் விருந்தோடு முடிவு பெற்றதென ஒரு நிருபர் எழுதுகிறார்.

(4-ம் பக்கத்தொடர்ச்சி)

நோக்கத்தில் (22) உட்பிரிவிற்கண்ட விஷயங்களுக்கு பாத்தியப்பட வேண்டியது. மேற்கண்ட பிரகாரம் ஹூடியி 1-க்கு 100-க்கு வீதத்திற்கு மேற்கண்ட நம்மியக்க வளர்ச்சி நிதியுடன் சேர்ந்த பாதிபோக மற்றபாதியை விசேஷ நிதியாகப் பிரத்தியேகணக்காகவைத்து அதிலிருந்து அமைச்சர், நூலாசிரியர்கள், உரையாசிரியர்கள் மொழிபெயர்ப்பாசிரியர்கள் இக்கழகத்தின் உத்தியோகஸ்தர்கள் இவர்களுக்கு கொடுக்கவேண்டிய வெகுமதி (Bonus) உத்தியோகத்தினின்று விலக்கினவர்களுக்குக் கொடுக்கும் பென்ஷன் இவைகள் நிறைவேற்றற்கூட்டத்தார் அபிப்பிராயப்படி கொடுக்கப்படும்.

V. 1. இக்கழகத்தின் மூலதனம் ரூ. 50000 ஐம்பதினாயிரமும் பங்கு 1-க்கு ரூ. 10 வீதம் 5000 பங்குகளாக பிரிக்கப்பட்டிருக்கிறது. மூலதனத்தை அதிகப்படுத்துவதற்காக பங்குகளை அதிகப்படுத்த இக்கழகத்தாருக்கு அதிகாரமுண்டு.

(2) இக்கழகத்திற்குப் பங்குகள் சேர்த்துக்கொடுப்பவர்களுக்கு அவர்கள் சேர்த்த பங்குகளுக்கு வசூலாயிருக்கிற தொகையின்மேல் 100-க்கு 2½ வீதம் அல்லது நிறைவேற்றற் கூட்டத்தினர் கூட்டியோ குறைத்தோ தீர்மானிக்கிறபடி கமிஷன் கொடுக்கப்படும்.

(3) இக்கழகத்திற்கு 100 பங்குகள் சேர்ந்ததும் லிமிடெட் கம்பெனியாக ரிஜிஸ்டர் செய்யப்பட்டு வேலைகள் துவக்கப்படும்.

குறிப்பு:- இக்கழகத்திற்கு பங்குகள் சேர்ப்பதற்காக ஏப்ரல் மாதம் 20ம் தேதிக்குமேல் சுற்றுப்பிரயாணஞ்செய்ய தீர்மானித்திருப்பதால் ஆங்காங்குள்ள அறிவியல் இயக்க அன்பர்கள் போதிய ஆதரவு காட்டும்படி கேட்டுக்கொள்கிறேன். இது சம்மந்த விபரங்கள் அறிய விரும்புகள் அடியிற்கண்ட எனது விலாசத்திற்கு கடிதம் எழுதிக் கொள்ளவும்.

இங்ஙனம்
தோழர். அ. இராகவன்
சாத்தான்குளம்,
திருநெல்வேலி ஜில்லா.

"சன்மார்க்கன்"
தமிழ்மாதப்பத்திரிகை.
பல அரிய கட்டுரைகளுடன் கைவல்யம்கட்டுரையும் தொடர்ச்சியாக வருகின்றது.
ஆண்டுசந்தா.
உள்நாடு ரூ. 1—0—0.
வெளிநாடு ரூ. 1—4—0.
ஆசிரியர்:—
சுவாமி சிவமீநசம்,
"சன்மார்க்கன்" பழனி.

சுயமரியாதை
இயக்கப்பிரமுகர்கள்.
திருவாளர்கள், 1. ஈ. வெ ராமசாமி, 2. W. P. A. சௌந்திரபாண்டியம், 3. ஆர். கே. ஷண்முகம், 4. எஸ். ராமநாதன் 5. கைவல்யசாமியார், 6. ஈ. வெ. ரா. நாகம்மாள், 7. இந்திராணி பாலசுப்பிரமணியம். 8. சிவகாமி, சிதம்பரனார், 9. குருசாமி குஞ்சிதம், 10. நீலாவதிராம சுப்பிரமணியம் 11. சுலோசனை பொன்னம்பலனார், 12. திவானகம், 13. அருணகிரிசுந்தரி, ஆகியவர்களின் போட்டோ படங்கள் 6½ X 4¾ சைஸ்பட்டம் 1-க்கு 0—8—0. ஈ. வெ. ரா. 8½ X 6½ 1-க்கு 1—0—0. மொத்தமாய் வாங்குகிறவர்களுக்கு 100க்கு 6—4—0 வீதமகமிஷன் கழித்துக்கொடுக்கப்படும்.
தனிகாப்பி வேண்டியவர்கள் விலைக்குமேல் 4 அணா ஸ்டாம்பு அனுப்பவேண்டும். விலாசம்:—
பாலு & Co.,
No. 3 ஒப்பணக்காரத்தெரு,
ஈரோடு

சென்னை இந்தியமாதர் சங்கம்.

வருடாந்திரக்கூட்டம்.

சென்ற சனிக்கிழமையன்று இந்திய மாதர் சங்கத்தின் வருடாந்திரக் கொண்டாட்டம் எழும்பூர் பாந்தியான் தோட்டத்தில் நடைபெற்றது. அதற்கு திருமதி. கிருஷ்ணன் மேனன் தலைமை வகித்தார். முன்னுரையாக கடந்த ஒருவருஷத்தில் சங்கத்தில் செய்த வேலைகளைப் பற்றி விளக்கிவிட்டு, இச்சங்கத்தில் எவ்விதபாகுபாடும், ஜாதிமத வித்தியாசமுமின்றி எல்லோரும்உழைக்கத் தக்க சாதனங்கள் இருப்பதை விளக்கி இனிவரும் ஆண்டில் செய்ய வேண்டிய முறையைப்பற்றிய சில யோசனைகள் கூறி தன்து பிரசங்கத்தை முடித்தார்-

பின்னர் திருமதி முத்துலட்சுமி அம்மாள் அவர்கள் வருடாந்திர அறிக்கையை வாசித்தார்... அறிக்கையை ஒட்டியும், அதை ஆதரிக்கவேண்டுமென்றும் திருமதிகள் மாலதி பட்டவர்த்தன், செரியன், அம்முசாமிஞதன் முதலியோர் பேசினார்கள்.

பின்னர் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

1. இந்திய மாதர் சங்க அங்கத்தினர்கள் சாரதா சட்டத்தின் ஷரத்துக்களை பொது ஜனங்களுக்குத் தெரிவிக்குமாறும், இந்த சட்டத்தை மீறி நடக்க எங்காவது முயற்சிகள் நடந்தால் அதை இந்திய மாதர் சங்க சாரதா கமிட்டிக்கு அறிவிக்க வேண்டுமென்றும் சட்டத்தை மீறியதாகக்கோர்ட்டுக்கு அறிவிக்கும் போது முன்பணமாகக்கட்ட சமூக ஊழியர்களுக்கோ, அல்லது அங்கத்திற்கோ, 100 ரூபாய் கடன் கொடுப்பதாயும் தெரிவிக்கிறது"

2. "ஜாதி வித்தியாசமின்றி எல்லாஹிந்துக்களும் எல்லா கோவில்களுக்குள்ளும் சென்று பிரார்த்திக்க அனுமதிக்கவேண்டுமென்றும் இச்சங்கம் பலமாக அபிப்பிராயப்படுகிறது. ஆகவே குருவாயூர் ஆலயப் பிரவேச சத்தியாக்கிரகத்தை மனப்பூர்வமாக ஆதரிக்கிறது".

3. "விபசாரத்தடைச்சட்டத்தின் சில பிரிவுகளாவது அழுலுக்கு கொண்டுவரப்பட்டிருப்பதற்கு இக்கூட்டம் திருப்தியடைந்து அச்சட்டத்தின் பல பிரிவுகளையும் திறமையாக அமுல் நடத்தி வைப்பதில் அதிகாரிகளுடன் ஒத்துழைக்குமாறு எல்லாப்பிரஜைகளையும் கேட்டுக் கொள்கிறது. சட்டம் அழுலுக்கு வருகையில் விபசார விடுதிகளிலுள்ள பல பெண்களை சம்ரக்ஷிக்கவேண்டி வருமாகையால் இப்போதுள்ள ஸ்தாபனங்களில் அவர்கள் கண்ணியமாகவும், உபயோகமாயும் வாழப்பயிற்சியளிக்க உபகாரச்சம்பளம் அளிப்பதற்காகப்பொது ஜனங்கள் தாராளமாகப் பொருளுதவி செய்யவேண்டுமெனக்கேட்டுக் கொள்ளுகிறது,"

கண்டி மருத்துவ சங்கம்.

13-4-32 மாலை 4-30 மணிக்கு 91ம் நெம்பர் திருக்கோணமலத் தெருவிலிருக்கும் ஷை சங்க நிலையத்தில் தோழர் வ. மு. சாமியவர்களின் அவைத்தலைமையின் கீழ் ஷை சங்கத்தின் விசேஷப்பொதுக்கூட்டங் கூடியது. அக்கூட்டத்திற்கு மருத்துவர்களும் பொது ஜனங்களும் விஜயஞ் செய்திருந்தார்கள்.

அவைத் தலைவரவர்கட்கு சங்க சார்பில் ரோஜா மாலை சூட்டப்பட்டது. பின் தோழர் பொ. அருணசலமவர்களால் சுயமரியாதைக் கீதம் பாடப்பட்டதும் அவைத் தலைவர் சொற்பொழிவு செய்த பின்னர் காரியதரிசி அவர்களால் சங்க சந்தா வரவு செலவுகள் வாசிக்கப்பட்டது. பொக்கிஷ்தாரவர்களால் இருப்புத் திட்டம் வாசிக்கப்பட்டது. பின்சங்கத்திற்கு நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்ட பின் தலைவர் முடிவுரையுடன் கூட்டம் கலைந்ததென ஒரு நிருபர் எழுதுகிறார்.

கொளும்பு இந்தியர் சுயமரியாதைச் சங்கம்

ஷை சங்கத்தின் 12-வது மாதாந்தப் பொதுக்கூட்டம் புறத்கோட்டை சம்புக்கா விதி 152 நெம்பர் பௌத்த மத பாடசாலையில் சங்கத் தலைவர் தோழர் என். எஸ். எம். ஆறுமுகம் அவர்களின் அவைத் தலைமையில் 5-4-32ந் தேதி நடை பெற்றது. தோழர்கள் பி. என். சுப்பையா எம். எஸ். சதாசிவம், எஸ். பிச்சையா, பேச்சிமுத்துப் புலவர் இவர்களால் சுயமரியாதையின் அரிய காரியங்கள் என்பதுபற்றி பேசப்பட்டு அக்கிராசனர் முடிவுரையுடனும் கூட்டம் வந்தேமாதரத்துடனும் இனிது கலைந்தது 9-4-32 ஆலோசனைக்கூட்டத்தில் சுயமரியாதை மகாநாடு கூடுவதைப் பற்றியும் வருஷபூர்த்தி விழா நடத்துவதைப் பற்றியும் கலந்து மெம்பர்களுக்கு கடிதம் எழுதப்பட்டது என சங்கக்காரிய தரிசி எழுதுகிறார்.

கலப்பு விவாகம்.

விருதுநகர் முனிசிபல் கவுன்சிலரும், தக்ஷிணமாரநாடார்கள் மகுமை ஏஜண்டுமான உயர். திரு. பி. வின்சென்ட் அவர்கள் செல்வி ராஜம்மாளுக்கும் ஷியூர் பிரபல வியாபாரியான உயர். திரு. ஏ. ஆர். வையாபுரி நாடார் அவர்கள் செல்வன் சிவமுருகனுக்கும் நகர சபைத் தலைவர் உயர் திரு. வி. வி. ராமசாமி அவர்கள் பார்ப்பனர் அன்றி சுயமரியாதை முறைப்படி விவாகம் நடத்திவைத்தார். மேற்படி விவாகத்திற்கு கவுன்சிலர்களும் பிரபல வியாபாரிகளும் வந்து அதிக விமரிசையாய் நடத்திவைத்தார்கள் என ஒரு நிருபர் எழுதுகிறார்

என்ற தீர்மானங்களும், இன்னும் பல தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டு கூட்டம் கலைந்தது.

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

மனிதன், ஆதிகாலக் காட்டுமிராண்டிகளிலிருந்து பெறப்பட்டவனென்பது ஓர் யூகை. அந்தக் கால ஆதி மனிதவுருவம் கிடைக்காவிடினும், ஆதிகால காட்டுமிராண்டி உருவங்கள, பற்பல இடங்களில் தோண்டி எடுக்கப்பட்டுள்ளதென சென்ற வருஷம் சீன தேசத்தில், ஆதிகால மனிதனும் குரங்கையும் போன்ற உருவங்கள் கிடைத்தன. அந்த எலும்பு உருவங்களைப் பரிசோதித்துப் பார்க்கையில் ஒருகாலத்தில் பூரண குரங்குமல்லாத, பூரண மனிதனுமல்லாத குரங்கு மனிதர்கள், உலகில் வாழ்ந்து வந்தார்களென்பது நிச்சயம்; ஜாவா தீவிலும், இங்கிலாந்திலும், சீனாவிலும் இத்தியாதிக் குரங்கு மனிதர்கள் சுமார் 10-லட்சம் வருஷத்திற்கு முன் வாழ்ந்திருக்கவேண்டும். அவர்கள் சந்ததியாரே நாமென அற்ஞர்கள் கூறுகின்றார்கள்.

1. நமது உருவம் எது? 2. நமது உடல் எது? 3. நமது உயிரேது? 4. நமது மனமேது? 5. நமது தெய்வங்களேது? 6. நமது ஜன சமூகமேது? 7. நமது நன்மை தீமை யேது? என்னும் விஷயங்கள் இனிவரும்..

கொழும்பு.

தென் ராசித் தாலுகா மருத்துவர் தல வாலிபர் சங்கம். இச்சங்கத்தின் மொதுக் கூட்டம் 7-4-32 வியாழக் கிழமை இரவு 8-மணிக்கு பூந்தோட்டம் வீதியிலுள்ள சங்க நிலயத்தில் சங்க உபதலைவர் தோழர் கு. சுப்பையா அவர்கள் தலைமையில் கூடியது. அதுசமயம்தோழர்கள் தெ. ஈ. புஷ்பராஜன். மருத்துவகுலவாலிபர்கடமை யென்பது பற்றியும் கு. சண்முகம் இந்திய மருத்துவர் நிலமை யென்பது பற்றியும். சு. இராமச்சந்திரன் எமது சங்கத்தின் நோக்கம் யென்பது பற்றியும் சொற்பொழி வாற்றினார்கள். பல தீர்மானங்களுடன் கூட்டம் கலைந்ததென ஒரு நிருபர் தெரிவிக்கிறார்.

உங்கள்

கண்ணையும்

காதையும்

கவனித்துக் கொள்ளுங்கள்

பூவிழல் !!

கண்ணில் பூவிழுந்து பார்வையைத் தடுப்பதை ஆபரேஷன் இல்லாமல் சுகப்படுத்தப்படும். நிலைமை எவ்வாறு இருப்பினும் நான்கு வாரங்களில் நிச்சயமாக குணப்படுத்தி விடுவோம்.

செவிடு !!

பாதி அல்லது முழுவதும் செவிடாயிருந்தால் கூடப் பரவாயில்லை. காதிரைச்சல், தலைவலி இருந்தாலும் அக்கரையில்லை. சுத்தமாக நிவர்த்திக்கப்படும். குணத்திற்கு உத்திரவாதம்.

விபரங்களுக்கு இங்கிலீஷில் விண்ணப்பித்துக் கொள்ளவும்.

"Sri" Works

Beadon St. Calcutta,

கோஷாயி இரவு மாத்திரை.

மலபந்த நிவாரணி-மலபந்தத்தினால் ஏற்பட்ட அன்னது வேஷம், அசதி, இடுப்புவலி, மார்நோய், வாய்வு உபத்திரவங்கள், கீல்வாய்வு, பிடிப்புகள், சூலை, தாதுநஷ்டம் முதலிய வியாதிகளுக்கு இரவு போஜனம் செய்த அரைமணி நேரத்திற்குப்பின் ஒரு வெற்றிலையில் கோஷாயி இரவு மாத்திரை ஒன்று மடித்து மென்று ஜலம் சாப்பிட்டால் வாய்வுகள் கலைந்து அதிகாலையில் மலம் தாராளமாய் கழிக்கும். வெட்டவாய்வு உபாதைகள் படிப்படியாய் குறைந்து குணம் தரக்கூடியது. (சர்க்கூட்) தேச்சஞ்சாரம் செய்துவரும் உத்தியோகஸ்தர்கள் வியாபாரிகள் இவர்களின் சௌகரியங்களை உத்தேசித்தே தயாரித்திருப்பதினால் எவ்விதபத்தியமுமில்லை. கோஷாயி இரவு மாத்திரை 51-கொண்ட சீசா 1-க்கு ரூ. 1—10—0. 101 மாத்திரை கொண்ட சீசா 1-க்கு ரூ. 3—0—0. பாக்கிங் தபால் செலவு வேறு மலாய் வாசிகள் ஆர்டருடன் ரூபாய் ஒன்று சேர்த்து முன்பணம் அனுப்பி வைக்கவும். எல்லா ஊர்களிலும் கமிஷன் ஏஜண்டுகள் தேவை.

டாக்டர் B. A. எதிராஜ் (கால்ராபைரி)

கோஷாயி வைத்தியசாலை தென்னூர், திருச்சி.

உதவி டாக்டர்:—T. K. V. Chalam,

ரோஜா முத்தையா
ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

விற்பனைக்காக நம்மிடம் உள்ள இதர பதிப்புப் புஸ்தகங்கள்.

1.	இயற்கைமதம் ...	0—8—0
2.	சிதம்பர ரகசியம் ...	0—8—0
3.	சுதந்திரப்போர் அல்லது உப்பள முற்றுகை	0—4—0
4.	பகுத்தறிவேவிடுதலை அல்லது ஜீவாத்மா இல்லை (சித்திரப்படங்களுடன் 100 பக்கங்களுக்கு மேல் உள்ளது) ...	0—6—0
5.	மாதர் சுதந்தரம் or பெண்மக்கள் பெருமை	0—8—0
6.	ஆராய்ச்சி அணிகலம் ...	0—12—0
7.	சென்னை லோக்கல் போர்டு ஆக்ட் ...	2—0—0
8.	மோட்டார்க்கார் இயந்திர சாஸ்திரமும் அதன் அனுபோகப்பயிற்சியும் (50 படங்களுடன் 200 பக்கங்கள் அடங்கிய பெரிய புஸ்தகம் ஆர்டருடன் 4 அணா ஸ்டாம்பு அனுப்பவேண்டும்) ...	2—0—0
	ஈ. வெ. ராமசாமியின் போட்டோபடம் ...	0—8—0
	சுயராஜ்யம் யாருக்கு ...	0—1—0
	சாமிகளின் அடிமைகள் ...	0—12—0

குறிப்பு:—புஸ்தகங்களுக்கு ஸ்டாம்பு வைத்து அனுப்புகின்றவர்கள் புஸ்தக கிரயத்துக்கு மேலாக புஸ்தகம் ஒன்றுக்கு ஒன்றரை அணா ஸ்டாம்பு அனுப்பவேண்டும். 8 அணாவுக்குக் குறைந்த ஆர்டருக்கு வி. பி. அனுப்பப்படமாட்டாது. ஆர்டர்களுக்கு பாதித்தொகையாவது முன்பணம் அனுப்பவேண்டும்.

'குடி அரசு' 'ரிவோல்ட்' மாலைகள்.

குடி அரசு மாலைகள் கோர்வையாக முதல்வருஷத்திலிருந்து சென்ற வருஷம்வரை 5 வருஷகாலம் வெளியான மலர்களைத்தனித் தனி வருஷமாக பைண்ட் செய்து புஸ்தகமாக வைக்கப்பட்டிருக்கிறது.

ஒவ்வொரு வருஷமாலை கிரயம்	ரூ.	4—0—0
ரிவோல்ட்டு ஒருவருஷமாலை பைண்ட் செய்தது கிரயம்	ரூ.	4—0—0

மானேஜர், குடி அரசு புத்தகாலயம்,
ஈரோடு.

பண்டிதர். உயர்திரு. சாமி சிதம்பரனார் அவர்களியற்றிய

மாதர் சுதந்திரம் அல்லது
பெண் மக்கள் பெருமை.

என்னும் அரிய நூல் விலை அணா 8. (எட்டு)

கிடைக்குமிடம்:—"குடி அரசு" புத்தகாலயம் ஈரோடு,
இம்பீரியல் பிரஸ், மாயவரம்.

"தமிழன்"

மலாய் நாட்டு சுயமரியாதை தமிழ் தினசரி.

உள்நாடு மாத சந்தா		$ 1, 00.
வெளிநாடு ,,	இந்தியா	$ 1, 50,

ஆசிரியர்:—சுவாமி அர்புதானந்தா.

விளாசம்:—மானேஜர் "தமிழன்"
10, ஜெல்ப்ரோட், ஈப்போ.

"சண்டமாருதம்"

சுயமரியாதைத் தமிழ் தினப்பதிப்பு.

அனேக தந்தி செய்திகள்
அச்சமற்ற கண்டனங்கள்
ஆணித்தரமான அபிப்பிராயங்கள்
நுணுகிகரமான குற்ப்புகள்
தேனின் இனிய "திரட்டுப்பால்"
சுவைச்சுவை மிக்க நாவல்கள்
மெய்கூச்செறிக்கும் "மின்வெட்டு"
அறிவைப்பெருக்கும் "அஷ்டதிக்கு"
முதலியன "சண்டமாருத"த்தில் வெளியாகின்றன.

சந்தா விபரம்.

உள்நாடு மாத சந்தா	ரூ.	1—4—0
தனிப்பிரதி ...	ரூ.	0—0—9
வெளிநாடு வருட சந்தா	ரூ.	13—0—0
ஆறுமாதம் ...	ரூ.	10—0—0

மானேஜர்
"சண்டமாருதம்"
திருச்சினாப்பள்ளி



Read the "SUPERSTITION OF KHADI"

A Discussion
By
S. Ramanathan
Pattabhi Sitharamyya
& N. S. Varadachari
in English.

Published by Kudi Arasu Publishing House
Erode.

Price per copy two annas. Send 0-2-0 annas postage stamps for a single copy.

Apply to:—
Manager "Kudi Arasu" Erode.

குடி அரசுப் பதிப்பக வெளியீடுகள்.

கைவல்யம் அல்லது கல்க்கியானம்.

இது கைவல்ய சாமியாரவர்களால் எழுதப்பட்ட கட்டுரைகளைத் தொகுத்து வெளியிடப்பட்டது. இங்கட்டுரைகளைப் படிப்பதால் அனேக சாஸ்திர புராண, இதிகாசங்களையும் அவற்றில் உள்ள சாதிப்புரட்டு சமயப்புரட்டு, முதலியவைகளையும் உணர்ந்து நிகரற்ற பண்டிதராகலாம். இதன் விலை அணு. 0—8—0

இராமாயண ஆராய்ச்சி.

இதில் இராமாயணத்தின் ஆபாசங்களை அறியலாம். கம்பஇராமாயணம், வால்மீக இராமாயணம் இரண்டிலும் உள்ள ஒழுல்களையும், ஒன்றற்கொன்று உள்ள வேறுபாடுகளையும் ஆராய்ந்து அவற்றில் உள்ள தெய்வீகப் புரட்டுகளை வெளியாக்குவது.

இதன் விலை முதற்பாகம் பாலகாண்டம் அணு. 0—4—0
இரண்டாம் பாகம் அயோத்தியா காண்டம் அணு. 0—8—0

ஞானசூரியன்.

இதில் வேதம், புராணம், ஸ்மிருதி முதலியவைகளின் ஆபாசங்களைக்காணலாம். மதங்களின் ஆபாசங்களையும், மதச்சடங்குகளின் ஆபாசங்களையும் அறியலாம். இதை ஒரு முறை படித்தால் ஆரியர்களின் புராதன நாகரீகத்தின் வண்டவாளம் முழுதும் தெரியும் பெரிய புத்தகம் 150 பக்கம். இதன் விலை அணு. 0—4—0

மநுநீதி மருமம்.

இது மநு தரும சாஸ்திரத்தில் உள்ள அநீதிகளையும், பார்ப்பனர், பார்ப்பனரல்லாதாரை அடிமைப்படுத்துவதற்கு ஏற்படுத்தியுள்ள சூழ்ச்சிகளையும் விளக்குவது. இதன் விலை அணு. 0—2—0

இராமலிங்க சுவாமிகள் பாடல் திரட்டு.

இது இராமலிங்க சுவாமியால் பாடிய அருட்பாவில், ஆரும் திருமுறையில் உள்ள பாடல்களிலிருந்து தொகுக்கப் பட்டது. இதில் உள்ள பாடல்களால், வேதம், புராணம், மதம் முதலியவைகளின் சூழ்ச்சிகளையும், அவைகள் பொய் என்பதையும் உணரலாம்.

இதன் விலை அணு. 0—2—0

சுயமரியாதைத் தாலாட்டு.

இதில் தீண்டாமைக் கொடுமை, சாதி சமயக் கொடுமை, ஏழை பணக்காரக் கொடுமை முதலியவற்றைத் கண்டித்துக் கூறப்பட்டிருக்கிறது. இனிய பாடல் எளிதில் பொருள் விளங்கும்.

இதன் விலை அணு. 0—2—0

சோதிடப் புரட்டு.

இதில், சோதிடம் என்பது பொய் என்பதையும், பார்ப்பனர்களும், புரோகிதர்களும் ஜனசமூகத்தை ஏமாற்றுவது தான்சோதிடமென்பதையும் இனிமையான சுலபமான-பாடல்களால் விளக்கிக் கூறப்பட்டிருக்கிறது. இதன் விலை அணு. 0—2—0

ஈ. வெ. இராமசாமியின் சீர்திருத்த மகாநாட்டுச் சொற்பொழிவு.

இதில் ஜன சமூகம், சீர்திருத்தம் பெற்றுச் சுகமாக வாழ வேண்டியதற்கான் வழிகளைக் காணலாம். மக்கள் அடிமைப்பட்டுப் பகுத்தறிவின்றி வாழ்வதற்குக் காரணங்களை உணரலாம், ஈ. வெ. ராமசாமியின் சொற்பொழிவுகளில் இது தலை சிறந்ததாகும்.

இதன் விலை அணு. 0—2—0.

சுயமரியாதைப்பாட்டல்.

இதில் சுயமரியாதைக் கொள்கைகளை விளக்கி, இனிமையான புதிய வர்ணமெட்டுகளில் பாடிய பாடல்கள் அடங்கியுள்ளன.

இதன் விலை அணு 0—2—0.

தர்மபரீக்ஷை அல்லது புராண ஆபாசம்.

இது ஒரு பழைய நூல். இதில் புராணங்களின் பொருத்தமற்ற கதைகளையும், முன்னுக்குப்பின் முரணை கொள்கைகளையும் தெள்ளத்தெளிய உணரலாம். இரண்டு இளைஞர்கள் மாறுவேடம் பூண்டு பொதுஜனங்களுக்குப்புராணப் புரட்டுகளை வெளிப்படுத்தும் முறையில் எழுதப்பட்டிருக்கிறது.

இதன் விலை அணு 0—3—0

பங்கஜம் அல்லது பார்ப்பனக்கொடுமை.

இது ஒருநாட்டகம், பார்ப்பனர்களின் புரட்டுக்களையும், ஜாதி வேற்றுமை, மதக்கொடுமை, சாஸ்திரக்கொடுமை முதலியவற்றையும் விளக்கிச் சமதர்மத்தைப் போதிப்பது. இதுவே தமிழில் உள்ள முதல் சுயமரியாதை நாடகம்.

இதன் விலை அணு 0—4—0

மேயோகூற்று மெய்யா? பொய்யா?

இது அமெரிக்க நாட்டு மாதாகிய "கன்னிமேயோ" எழுதியதிலுள்ள உண்மைகளையும், அதில் சொல்லப்படாமல் இருக்கும் நமது நாட்டிலுள்ள வேறு பல ஆபாசங்களையும் எடுத்துக் காட்டி சீர்திருத்த வேண்டுமென்னும் உணர்ச்சியை உண்டாக்குவது.

இதன் விலை அணு 0—3—0

அகத்தியர் ஆராய்ச்சி.

இதில் மூச்சங்கங்களின் புரட்டுக்களையும், அகத்தியர் சரித்திர புரட்டுக்களையும் தமிழ்நூல் ஆதாரங்களோடு விளக்கப்பட்டிருக்கிறது. சென்னை, பண்டிதர் கா. நமச்சிவாய முதலியாரால் எழுதப்பட்டது.

இதன விலை அணு 0—2—0

கடவுளை நிந்திக்கும் கயவர்கள் யார்

இதில், கடவுளை நிந்திப்பவர்கள் சுயமரியாதைக்காரர்களல்லவென்றும், புராணமரியாதைக்காரர்கள் தான் கடவுளை நிந்திக்கும் நாஸ்திகர்களென்றும், இதிகாசப் புராணங்களின் ஆதாரங்களைக்கொண்டு விளக்கிக் காட்டப்பட்டிருக்கிறது. பண்டிதர் அ. ராகவன் அவர்களால் எழுதப்பட்டது.

இதன் விலை அணு 0—2—0

கதர்-மூட நம்பிக்கை (இங்கிலீஷ்)

இதில், திரு. எஸ். ராமநாதன் அவர்கள் கதரைப்பற்றிச் செய்த உபந்யாசமும், அதற்குத் திருவாளர்கள், பட்டாபி சீத்தாராமையாவும், என். எஸ். வரதாச்சாரியும் எழுதிய மறுப்புரைகளும், அவைகளுக்கு எஸ். ராமநாதன் எழுதிய பதில்களும் ஆங்கிலத்தில் செய்யப்பட்டிருக்கின்றன. இதைப் படித்தால் கதர்ப் புரட்டை உணரலாம்.

இதன் விலை அணு 0—2—0

மானேஜர், குடி அரசு புத்தகாலயம், ஈரோடு.

உண்மை விளக்கம் பதிப்பகத்தில் அச்சிடப்பட்டு திருமதி நாகம்மாள் அவர்களால் வெளியிடப்பட்டது.